

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 20 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 12 – செவ்வாய்க்கிழமை 29 ஆகஸ்ட் 2023 – மதுரை 16 + 4 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 20: Thiruvalluvar Year - 2054 - Aavani 12 - Tuesday 29 August 2023 - Madurai 16+4 Pages ₹ 5.00


# இலட்சியப் பயணம் தொடரும்; வெற்றிகள் நிச்சயம் குவியும்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

தமிழ்நாட்டு மக்கள் அளித்துள்ள முதலமைச்சர் என்ற பொறுப்பின் அடிப்படையிலும், உடன்பிறப்புகளாம் நீங்கள் அளித்த கழகத் தலைவர் என்ற பொறுப்பினை சுமந்தும் காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த 4 நாட்களாகப் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு, மக்கள் காட்டிய அன்பையும் கழகத்தினர் அளித்த வரவேற்பையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு சென்னை திரும்பியிருக்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் டெல்டா மாவட்டங்களுக்கு அடிக்கடி சென்று வந்திருந்தாலும், இந்த முறை 4 நாட்கள் தொடர்ச்சியான பயணம் என்றபோது, சொந்த ஊருக்குச் செல்லும் குழந்தையின் குதூகல மனநிலையுடன்தான் புறப்பட்டேன்.

நமது திராவிட மாடல் அரசு அறிவித்த திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் ஆய்வுப் பணிகள், திருமண நிகழ்வுகள், ஆதீனகர்த்தருடன் சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் உங்களில் ஒருவனான நான் பங்கேற்றதைச் செய்திகள் வாயிலாகப் பலரும் அறிந்திருப்பீர்கள். **இந்தப் பயணத்தில் மிக முக்கியமான நிகழ்வு என்பது, அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட' விரிவாக்கமாகும்.**

**கடந்த ஆண்டு செப்டம்பர் 15 அன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாளில் மதுரையில் இதனைத் தொடங்கி வைத்தேன். அதனைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்து, 30 ஆயிரம் பள்ளிகளில் 17 இலட்சம் மாணவ - மாணவியர் பயன்பெறும் வகையில் ஆகஸ்ட் 25-ஆம் நாள் மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் அவரவர் பகுதிகளில் இதனைத் தொடங்கி வைத்த நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அவர் படித்த தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பு எனக்கு அமைந்தது.

குழந்தைகள் தெம்புடன் பாடங்களைக் கவனிக்கும் வகையில் சத்தான காலை உணவு, அவர்களது அன்னையரின் பணிச்சுமையைக் குறைக்கின்ற பொறுப்பு, பெற்றோரின் நிலை உணர்ந்து தாயுள்ளத்துடன் அரசாங்கமே குழந்தைகளின் நலனில் காட்டுகின்ற அக்கறை, தமிழ்நாட்டின் எதிர்காலத் தலைமுறை உடல்நலத்துடன் அறிவு வளர்ச்சி பெற்றிடுவதற்கான கட்டமைப்பு எனக் காலை உணவுத் திட்டம் பலராலும் பாராட்டப்படுகின்ற திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் பிறந்த ஊரில், அவர் வழியில் நடைபோடும் திராவிட மாடல் அரசின் விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டம் எனும் இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இதுவரை செயல்படுத்தப்படாத மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிக் காத்த கழகத்தையும், அந்தக் கழகத்தின் தலைமையில் அரசு அமையும் போதெல்லாம் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும் எண்ணிப் பார்த்தேன்.

**தன்னிகரற்ற தலைவர் கலைஞர் தன் தோளிலும் நெஞ்சிலும் அரைநூற்றாண்டு காலம் சுமந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் சுமக்கத் தொடங்கி இன்றுடன் (ஆகஸ்ட் 28) ஐந்தாண்டுகள் நிறைவடைகின்றன. 94 வயதில் 80 ஆண்டு காலப் பொதுவாழ்க்கை எனும் நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டவர் தலைவர் கலைஞர். பன்முக ஆற்றல் கொண்ட நிர்வாகி - படைப்பாளர். அவருடைய பேராற்றல் எனக்கு இல்லை. ஆனால், தலைவர் கலைஞரிடம் நான் கற்றுக்கொண்டு, அவரிடமே பாராட்டு பெறும் அளவிற்கு உழைக்கக்கூடிய வலிமை எனக்கு உண்டு. இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்திடக் கலைஞரும் அவருடைய ஒவ்வொரு உடன்பிறப்பும் எப்படி உழைத்தார்களோ, அதுபோலத்தான் கலைஞரின் பிள்ளையான நானும் ஓர் உடன்பிறப்பு என்ற தகுதியுடன் தலைமைப் பொறுப்பினை சுமந்து, உங்களில் ஒருவனாக உழைத்துக் கொண்டிருக்கிறேன்.**

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரை 2018-ஆம் ஆண்டு இயற்கை நம்மிடமிருந்து பிரித்தபோது, இயக்கத்தைக் காக்கும் பெரும் பொறுப்பை உங்கள் அனைவரின் ஆதரவுடன் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் என் மீது சுமத்தினார். கலைஞரின் உடன்பிறப்புகளான நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையுடன் நானும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அப்போது, கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. நாடாளுமன்ற மக்களவையில் நமக்கு ஒரு இடம் கூட இல்லை. தலைவரை இழந்த கழகத்தில் பிளவு வராதா என்று எதிர்பார்த்த எதிரிகள் உண்டு. வெற்றிடம் ஏற்பட்டுவிட்டதாக கற்பனைக் குதிரையில் பயணம் செய்ய நினைத்தவர்கள் உண்டு. முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக் காக்கப்பட்ட இந்த இயக்கம் எப்போதும் ஒன்றுபட்டு நிற்கும் என்பதை ஒவ்வொரு உடன்பிறப்பும் மெய்ப்பித்துக் காட்டியதுடன், 'வெற்றிடத்திற்கு வேலை இல்லை, இது வெற்றிக்கான இயக்கம்' என்பதை நம் உழைப்பால் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் வலிமையான கூட்டணியை உருவாக்கினோம். அது வெறும் தேர்தல் நேரக் கூட்டணி அல்ல. கொள்கை உணர்வுமிக்க கூட்டணி. ஜனநாயகத்தின் மீதும், நாட்டின் பன்முகத் தன்மை மீதும், மதச்சார்பின்மை கொள்கை மீதும் நம்பிக்கையும் உறுதியும் கொண்ட கூட்டணி. நாடாளுமன்றத் தேர்தலில் அந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தமிழ்நாட்டில் பெற்ற மகத்தான வெற்றி என்பது இந்திய அளவிலான அரசியல் இயக்கங்களுக்கு ஒரு ஃபார்முலாவாக ஆனது. மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சி என்ற தகுதியை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது. கழகத்தை வழிநடத்தும் பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான எனக்கு உடன்பிறப்புகளாகிய நீங்கள் தேடித் தந்த பெருமை இது.

**இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். கழகத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி.. வெற்றி.. மகத்தான வெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக் களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும்.**

அதன்பிறகு நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலிலும் அதே கூட்டணி களம் கண்டு, தமிழ்நாட்டு உள்ளாட்சித் தேர்தல் வரலாற்றில் அதுவரை இல்லாத வகையில், எதிர்க்கட்சியின் வெற்றி பதிவு செய்யப்பட்டது. உடன்பிறப்புகளாம் உங்களின் உழைப்புதான் அன்றைய ஆளுங்கட்சியினரின் பணபலம், அதிகார பலம் எல்லாவற்றையும் மீறிக் கழகத்தையும் தோழமைக் கட்சிகளையும் வெற்றி பெறச் செய்தன.

இந்த வெற்றிகள் நமக்கு ஊக்கத்தை அளித்தன. ஆனாலும், ஆறாவது முறையாகத் தலைவர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு அமையாமல் போய்விட்டதே என்ற ஏக்கம் என் நெஞ்சில் நீடித்தது. பேரறிஞர் அண்ணா அருகில் தலைவர் கலைஞர் ஓய்வு கொள்ளப் போய் விட்டாலும் நம் இதயத்துடிப்பாக அவர்தானே இருக்கிறார். அவர்தானே நம்மை இயக்குகின்ற பேராற்றலாக இருக்கிறார். அதனால், சட்டமன்றத் தேர்தலிலும் கழகம் வெற்றிபெற்று, அந்த வெற்றியை முத்தமிழறிஞர் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்க வேண்டும் எனச் சூளுரைத்தேன்.

2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கொள்கைக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. அதற்கு உடன்பிறப்புகளாகிய உங்களின் ஓயாத உழைப்பும் - ஒற்றுமையான செயல்பாடும் முக்கியமான காரணமாகும். அதன் விளைவாக, தி.மு.க.வுக்குத் தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை பலத்தை தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்கள். என்னுடைய வெற்றிச் சான்றிதழை முத்தமிழறிஞர் கலைஞர் ஓய்வுகொள்ளும் இடத்தில் வைத்து, நன்றிக் காணிக்கை செலுத்திவிட்டு, பதவியேற்பு நிகழ்விலும் அவர் பெயரையும் சேர்த்தே உச்சரித்து, இது கலைஞர் அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் என்பதை உறுதி செய்தேன்.

## உங்களில் ஒருவன்

கழகத்தின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு நாளும் மக்களுக்கான திட்டங்கள்தான், சாதனைகள்தான்! சிறு குறை சுட்டிக்காட்டப்பட்டாலும் உடனடியாக அதனைச் சரி செய்து, ஆட்சி சக்கரம் விரைவாகவும் வலுவாகவும் சுழலும் வகையில் உழைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த உழைப்புக்கு மக்கள் தந்த அங்கீகாரம்தான் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கழகத்திற்கும் கூட்டணிக்கும் கிடைத்த மகத்தான வெற்றி.

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் உண்மையான ஜனநாயக சக்திகளுடன் இணைந்து பயணிக்கின்ற இயக்கம். மக்கள் நலனுக்கு ஆதரவானவர்கள் யார், மக்களின் எதிரிகள் யார் என்று அடையாளம் கண்டு செயல்படுகின்ற இயக்கம். அந்த வகையில்தான் 2019-ஆம் ஆண்டு அமைந்த கொள்கைக் கூட்டணி அடுத்தடுத்த தேர்தல்களிலும் உறுதியாகத் தொடர்வதுடன், ஒவ்வொரு தேர்தல் களத்திலும் வெற்றியும் தொடர்ந்து வருகிறது.

அதுபோல, கழக உடன்பிறப்புகளும் இந்த இயக்கத்தின் இலட்சியமே பெரிது என்று ஒன்றுபட்டு உழைக்கும்போது மகத்தான வெற்றி கிடைக்கிறது. தி.மு.கழகம் தமிழ்நாட்டை நிரந்தரமாக ஆட்சி செய்ய வேண்டும் என்பது உங்களில் ஒருவனான என் இலக்கு. தொடர்ச்சியாக நாம் ஆட்சியில் இல்லாத சூழல்களால் தமிழ்நாட்டின் வளர்ச்சி எந்தளவு பாழ்பட்டது என்பதைப் பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் மக்கள் பார்த்தார்கள். அனுபவித்தார்கள். அந்த நிலையைக் கடந்த இரண்டாண்டுகளில் பெருமளவு மாற்றி இருக்கிறோம். வளர்ச்சிப் படிக்கட்டுகளில் தமிழ்நாடு முன்னேறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த வளர்ச்சி நீடிக்க வேண்டும் என்றால் தி.மு.கழகம் தொடர்ந்து ஆட்சி செய்கின்ற வாய்ப்பு அமைய வேண்டும்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் தங்களுக்கு எக்காலத்திலும் வெற்றி வாய்ப்பு இல்லாத தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதை மக்கள் அறிவார்கள். தங்கள் கட்சியின் ஆட்சி நடைபெறும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைவிடப் பெருமளவு குறைவாகவே தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். இத்தகைய நிலையிலும், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அயராமல் உழைக்கிறது திராவிட மாடல் அரசு. விடியல் வெளிச்சத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

**ஒன்றிய ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டால்தான், நமது மாநிலத்திற்குரிய நிதி ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கும். முழுமையான வெளிச்சம் பரவும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே மதவாத இருட்டை விரட்டும் விடியல் தேவைப்படுகின்ற காலம் இது. அதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்த இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பா.ஜ.க அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது. அந்த இந்தியாதான் இந்தியாவுக்கு விடியலைத் தரக்கூடிய வலிமை கொண்டதாக, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திகழும்.**

இந்தியாவின் வெற்றி முழுமையடைய வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றாக வேண்டும். கழகத்தின் தலைவர் என்ற பொறுப்பை நான் சுமந்த இந்த ஐந்தாண்டு காலத்தில் கண்ட களங்கள் அனைத்திலும் வெற்றி.. வெற்றி.. மகத்தான வெற்றி என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம் உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்புதான். உங்களின் ஆதரவு இருக்கும்வரை எந்தக் களத்திலும் உங்களில் ஒருவனான என்னால் வென்று காட்ட முடியும்.

ஒற்றுமையுடன் கூடிய உழைப்பு எப்போதுமே வெற்றியாக விளையும். கழக உடன்பிறப்புகள் அந்த ஒற்றுமையைக் கட்டிக்காத்து உழைத்திட வேண்டும் என்பது கழகத் தலைவர் என்ற முறையில் எனது அன்பு வேண்டுகோளாகும். உங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க நான் இருக்கிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்ற நீங்கள் இருக்கிறீர்கள். நம் உயிருக்கு உயிராகத் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் இருக்கிறது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞரால் கட்டிக்காக்கப்பட்ட தி.மு.க எனும் பேரியக்கம், நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமான விடியலைத் தர வேண்டிய பொறுப்பில் பங்கேற்றிருக்கிறது. உங்கள் ஆதரவுடன் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற, உங்களில் ஒருவனான நான் ஆயத்தமாக இருக்கிறேன். காண்கின்ற களம் அனைத்திலும் வெற்றியைக் குவிப்போம்.

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆவணி 11
28-08-2023.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 29-08-2023

# பசிப்பிணி மருத்துவர்

சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னன், ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால் 'பசிப்பிணி மருத்துவன்' என்று போற்றப்பட்டுள்ளார்.

'பசிப்பிணி மருத்துவன் இல்லம்

அணித்தோ சேய்த்தோ?' என்கிறது புறநானூறுப் பாட்டு. அத்தகைய பசிப் பிணி மருத்துவராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டத்தை கலைஞர் அவர்கள் பிறந்த திருக்குவளை பள்ளியில் தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்கள், தனது வாழ்விலோர் பொன்னாள் என்று சொல்லி இருக்கிறார். அவரது ஆட்சியே பொற்கால ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி - என்கிறார் வள்ளுவர். வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் என்கிறார் வள்ளுவர். அதையும் தாண்டிய ஒரு கருத்தை முதலமைச்சர் சொல்லி இருக்கிறார். **'காலை உணவுத் திட்டத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்வதை நிதி ஒதுக்கீடு என்று சொல்ல மாட்டேன், நிதி முதலீடு ஆகும்'** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டு மாணவ சமுதாயத்தின் அறிவுக்கு முதலீடு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் வழியில் - இந்த திட்டத்தை தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர்.

அவ்வை மூதாட்டி சொன்னாரே... பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்று. பசி வந்து அந்த பசியைத் தீர்க்க உணவு கிடைக்காத மனிதன் தன்னிடமுள்ள மானம், குலம், கல்வி, வன்மை, அறிவு, தானம், தவம், காமுறுதல், முயற்சி, தாளாமை - ஆகிய பத்தையும் இழந்து விடுவான் என்றார். அந்த வகையில் பசியைப் போக்கினால்...? அனைத்துச் செல்வங்களும் அந்த மாணவச் செல்வங்களை அடையுமே? அதைத்தான் செய்திருக்கிறார் முதலமைச்சர்.

**"சென்னை அசோக் நகரில் உள்ள பெண்கள் மேனிலைப்பள்ளிக்கு ஒரு விழாவுக்கு நான் சென்றிருந்தபோது அங்கு படிக்கும் மாணவிகளிடம் பேசிக் கொண்டு இருந்தேன். காலையில என்ன சாப்பிட்டீங்க என்று கேட்டேன். சாப்பிடவில்லை என்று பெரும்பாலானவர்கள் சொன்னார்கள்.**

**எங்க வீட்டுல சமையல் பண்ணல என்று ஒரு மாணவி சொன்னார். மத்தியானம் ஸ்கூல்ல சாப்பிட்டுக்கோ என்று அம்மா சொல்லிட்டாங்க என்று இன்னொரு மாணவி சொன்னார். காலையில் டீ குடிச்சிட்டு வந்தேன் என்று மற்றொரு மாணவி சொன்னார். இதை எல்லாம் மனதில் வைத்துத்தான் காலை உணவுத் திட்டம் உருவாக்கப்பட்டது"** என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது எத்தனை உண்மையான சொற்கள் என்பதை இணைய தளத்தில் பலரும் எழுதி பாராட்டி வருகிறார்கள்.

ப்ரியம்யா என்ற பதிவர் ஒருவர் எழுதி இருக்கிறார்...

"மதிய உணவுக்காக மட்டுமே பள்ளி வரும் பிள்ளைகளை எனக்கு பரிச்சயம் உண்டு. செல்லப்பூனை போல சிறுகுடலைத் தூங்க வைத்து இருப்பார்கள். காலை ஒண்ணுக்கு பெல் அடிக்கும் போது பள்ளி சமையலறை கூடத்திலிருந்து கிளம்பும் தாளிப்பு மணம் வயிற்றில் சமத்தாய் தூங்கும் பூனையின் காதை பிடித்து உயர்த்த புலன் விழிப்பார்கள். சாப்பிட்டியா என்று கேட்கவே பயமாக இருக்கும். இல்லை என்று சொல்ல மாட்டார்கள் பெரும்பாலும். ஆமாம் என்றும் சொல்ல மாட்டார்கள்...

வருடந்தோறும் குமார் என்றும்,கண்ணன் என்றும் முனீஸ்வரன் என்றும் பெயர் மட்டும் மாறுகிறது. ஆனால் பசி கர்ப்பக்கிரகம் விக்கிரகம் போல கருக்கு மங்காது இருக்கிறது. இதற்காகவே மதிய உணவுக்கு பின்னர் கணித பாடவேளையை மாற்றி வைக்க சொல்லி சண்டையிட்ட ஒரு ஆசிரியரை எனக்கு தெரியும். என்ன sir காலையில fresh ஆக கணக்கு போடாமல் தூக்கம் வரும் பீரியட்களை வாங்கி வைக்கிறீர்கள் என்போம். பசியில் என்ன படிப்பான் பிள்ளை வயிறு நிறையட்டும் முதலில்.... அதுதான் ஆதார சூத்திரம் என்பார் வெள்ளை சிரிப்போடு.

இந்நிலையில் அரசு காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது எனக்கு உவகையையே தருகிறது. பணிப்பளு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம். இப்போது தட்டு நிறைய பொங்கலும், கிச்சடியும் நிரப்பிக்கொண்டு குட்டி குட்டி விரல்கள் உணவை அள்ளி அள்ளி வாயில் இட்டுக் கொள்கிற ஒரு சித்திரம் என் மனதில் விரிகிறது. நீங்கள் எதையோ பேசிக்கொண்டே கிடங்கள்... அதற்குள் எத்தனையோ கண்ணனும், கார்த்திக்கும், குமரனும் ஒரு பிடியாவது வளர்ந் திருப்பான்கள் இல்லையா?" என்று எழுதி இருக்கிறார் ப்ரியம்யா. இத்தகைய வர்களை நினைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கிய திட்டம் இது.

**"ஒன்பது வயதில் தந்தையை இழந்தவன் நான். உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டேன். அப்படி ஒரு சூழலில்தான் நான் பள்ளியில் மதிய உணவு சாப்பிடத் தொடங்கினேன். மதிய உணவு சாப்பிட்ட கையோடு வகுப்பறையில் அமர்ந்து நண்பர்களோடு இணைந்து படித்த அனுபவங்கள் அதிகம். நான் மேடைப் பேச்சாளர் ஆவதற்கான விதையும் அங்குதான் முளைத்தது. அந்த அனுபவங்களே நான் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 456 மதிப்பெண்கள் எடுக்க உந்துசக்தி யாக இருந்தன. அந்த மதிப்பெண்களுக்குப் பிறகு என் உறவினர்களே என்னை மதிக்க ஆரம்பித்தார்கள்.**

**யாரிடமும் போய் நிற்கக் கூடிய சூழலைத் தராத கல்வித் திட்டத்தில் மதிய உணவு கிடைப்பது பெரும்பேறாக இருந்தது எனக்கு. 15 ஆண்டுகளுக்குப் பிறகு தான் இதன் பெருமையை, உன்னதத்தை, உண்மையான பலனை நாம் அறிந்து கொள்ள முடியும். இது வயிற்றுப் பசி, அறிவுப் பசி தொடர்புடையது மட்டுமல்ல, உளவியல் தொடர்புடையதும்கூட. அதை காலம் மிகச் சரியாக உணர்த்தும் என நம்புகிறேன்"** என்று எழுதி இருக்கிறார் நாகப்பன் என்ற பதிவர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நோக்கத்தை இதை விட அழகாக யாரும் சொல்ல முடியாது.

"பெற்றோர் இருவருமே வேலைக்கு போகும் குடும்பங்கள் அதிகமாகி விட்டது. இந்த நிலையில் காலை உணவு தயாரிப்பு என்பதே சிரமம் ஆகிறது மத்திய தரவர்க்கத்தில். இந்தநிலையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஏழை எளியவர்க்கு மட்டுமல்ல எல்லார்க்கும் நன்மை தருவது தான்" என்கிறார் ஒரு பெண்மணி.

**இலட்சக்கணக்கான குடும்பங்களின் கவலையை நீக்கும் பசிப்பிணி மருத்துவராய் உயர்ந்து நிற்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

●●

## ஜாதிவாரி கணக்கெடுப்பை ஒன்றிய அரசு வெறுப்புடன் பார்க்கிறது! லாலு பிரசாத் யாதவ் குற்றச்சாட்டு!

*பாட்னா, ஆக.29 - ஜாதிவாரி கணக்கெடுப்பை ஒன்றிய அரசு வெறுப்புடன் பார்ப்பதாக ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ் குற்றம்சாட்டி யுள்ளார்.*

*பீகாரில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஜாதிவாரி கணக்கெடுப்பை பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசு வெறுப்புடன் பார்க்கிறது என்று ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.) தலைவர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்தார்.*

*பாட்னாவில் புத்தக வெளியீட்டு விழாவில் செய்தியாளர்களிடம் பேசிய லாலு பிரசாத் யாதவ்,*

*"சமீபத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினோம். ஜாதிவாரி கணக்கெடுப்பை ஒன்றிய அரசு வெறுப்புணர்ச்சியுடன் பார்க்கிறது. ஒருவரின் ஜாதி மற்றும் பொருளாதார நிலை குறித்து தெரியாமல் எப்படி கொள்கைகளை உருவாக்க முடியும்?" என்று அவர் தெரிவித்தார்.*

*நிகழ்ச்சியில் மனோஜ் மிட்டா எழுதிய சாதி பெருமை என்ற புத்தகத்தை லாலு பிரசாத் யாதவ் வெளியிட்டார்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.08.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்து, 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, UPS நிறுவனத்தின் உலகளாவிய தலைமை டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பாலசுப்ரமணியன், தலைமை மனித வள அலுவலர் டேரல் ஃபோர்டு, இந்தியாவிற்கான துணைத் தலைவர் சுப்ரமணி ராமகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் - உயர் தொழில்நுட்ப

# வேலைவாய்ப்பு பயிற்சி பெறுவதற்கான அனுமதி கடிதம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 29 - அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட UPS நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னையில் 400க்கும் மேற்பட்ட உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.08.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் உலகளவில் முன்னணியில் உள்ள UPS (United Parcel Service) நிறுவனம், இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் 400க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (Technology Centre) திறந்து வைத்தார்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார்.

அகில இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதார குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வணிக நடைமுறைச் சட்டம் / விதிகளில் பெருமளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, அனுமதிகள் பெறுவதை இலகுவாக்கியதன் விளைவாக, ஒன்றிய அரசு வெளியிட்டுவரும் தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசையில், 14ஆம் இடத்திலிருந்த தமிழ்நாடு, வெகுவாக முன்னேறி தற்போது 3ஆம் இடத்தை பெற்றுள்ளது. மேலும், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட துறைவாரியான தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்கு, துறைவாரியாக கொள்கைகளையும் (Sector Specific Policies) தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியதன் விளைவாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

**யுனைடெட் பார்சல் சர்வீசஸ் நிறுவனம் (M/s United Parcel Service UPS)**

முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளின் அடுத்த கட்டமாக, 2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மேற்கொண்டு வருகின்றது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த UPS நிறுவனம், சரக்குப் போக்குவரத்து / தளவாடங்களை (Logistics) 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொண்டுசெல்வதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிவரும் உலகளாவிய முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், உலகளவில் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது,

தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச்செல்வதில் தொடர்ந்து முதலீடு செய்து, இந்தியாவில் முதலாவதாக, சென்னை போரூரில் உள்ள RMZ Paramount வளாகத்தில் இந்நிறுவனம் அமைத்துள்ள தொழில்நுட்ப மையத்தை (UPS Technology Centre) முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார். மேலும், 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அம்மையத்தில் பயிற்சி பெறுவதற்கான கடிதங்களையும் வழங்கினார்.

தொழிற்சாலை பொறியியல், மென்பொருள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளைச் சேர்ந்த 400 உயர் தொழில்நுட்ப வல்லுநர்களை, குறிப்பாக கிராமப்புற இளைஞர்களுக்கு, திறன்பயிற்சி அளித்து பணியமர்த்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப மையத்தை அமைப்பதற்கு இந்தியாவில் பல நகரங்கள் பரிசீலிக்கப்பட்டதில், அமெரிக்காவில் உள்ள தங்களது தலைமையகம் போன்றே நேர்த்தியான ஒரு இடம் என உணர்ந்ததால் சென்னையை தேர்ந்தெடுத்ததாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாகவே, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான மையங்களும், உலகளாவிய திறன் மையங்களும் (Global Capability Centres - GCCs) அதிக அளவில் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில், 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. உலக அளவில் தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை வெகுவாக அதிகரிக்க இவை பெரிதும் உதவும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, UPS நிறுவனத்தின் உலகளாவிய தலைமை டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பால சுப்ரமணியன், தலைமை மனித வள அலுவலர் டேரல் ஃபோர்டு, இந்தியாவிற்கான துணைத் தலைவர்

சுப்ரமணி ராமகிருஷ்ணன், சென்னை தொழில்நுட்ப கழகத்தின் தலைவர் பி. ஸ்ரீராம், கேரியர் டெவலப்மண்ட் மையத்தின் முதல்வர் டாக்டர் பாலமுரளி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சி வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., வைரமணி, இளைஞர் அணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்டாலின்குமார், பழனியாண்டி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் ஆனந்த், கார்த்தி மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## தகுதியும், முன் அனுபவமும் இல்லாத போதிலும்

# அதானியிடம் ஒப்படைக்கப்பட்ட பாரத்மாலா திட்டங்கள்!

பிரதமரின் நெருக்கம் இருந்தால் போதும் கனவிலும் நினைக்காத திட்டங்களும் கிடைக்கும் என்பது ஒன்றிய பா.ஜ. அரசின் சித்தாந்தமாக மாறிவிட்டதோ என்று ஐயப்படுகின்ற அளவுக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறார் அதானி. எதிர்க்கட்சிகள் தரப்பில் எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் அதையெல்லாம் புறங்கையால் தள்ளிவிட்டு, கர்ண பரம்பரையில் வந்தவர்களைப்போல, அதானி மற்றும் பா.ஜ.வுக்கு தாராள நிதி தரும் தொழிலதிபர்களின் நிறுவனங்கள், பா.ஜ. முக்கிய பிரமுகர்களின் நிறுவனங்களுக்கு தகுதியில்லாத போதிலும் திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இந்த வரிசையில் சமீபத்தில் சேர்ந்திருப்பது பாரத் மாலா திட்டம்.




நாட்டின் எல்லைப் பகுதிகள், கடலோரப் பகுதிகள், துறைமுகங்கள், சுற்றுலா தலங்கள், 100 மாவட்ட தலைமையகங்கள் ஆகியவற்றை இணைக்கும் 34,800 கி.மீ. நீள சாலை அமைப்பது தான் பாரத் மாலா திட்டத்தின் நோக்கமாகும். நாட்டின் மிகப்பெரிய நெடுஞ்சாலைத் திட்டங்களில் ஒன்று என்பதால் தகுதி வாய்ந்த, முன் அனுபவம் பெற்ற நிறுவனங்களுக்கு தான் இந்த திட்டம் வழங்கப்பட வேண்டும் என்பது காலம் காலமாக இருந்து வந்த நடைமுறை. ஆனால், பாரத் மாலா திட்ட பணிகள் ஒப்படைக்கப்பட்டது தொடர்பாக சி.ஏ.ஜி. வெளியிட்ட அறிக்கை, முறைகேடுகள், விதி மீறல்களின் உச்சத்தை பிரதிபலிப்பதாகவும், கடும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. காரணம், அனுபவமும், தகுதியும் இல்லாத போதும் அதானி நிறுவனங் களுக்கும் பா.ஜ.வுக்கு தாராள கட்சி நிதி வழங்கிய மற்றும் பா.ஜ. தலைவர்களின் நிறுவனங்களுக்கும் விதிகளை மீறி திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன.

உதாரணமாக, அதானி டிரான்ஸ்போர்ட் தலைமையிலான நிறுவனங்களின் கூட்டமைப்பில் உள்ள சூர்யபேட் கம்மம் ரோடு பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு தெலங்கானாவில் உள்ள சூர்யபேட் மற்றும் கம்மம் இடையிலான நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவ னத்திற்கு நெடுஞ்சாலை அமைக்கும் பணியில் கொஞ்சம் கூட முன் அனுபவம் இல்லை. இதேபோன்று தான், பி.என்.ஆர். இன்போடெக் என்ற உள்கட்டமைப்பு நிறுவனத்திற்கு லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி 2019ம் ஆண்டு ஆகஸ்ட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான மதிப்பீட்டு செலவு, நிர்ணயித்திருந்ததை விட 17.44 சதவீதம் அதிகம். இது மட்டுமின்றி மறுமதிப்பீட்டிலும் திட்டச் செலவு 2.02 சதவீதம் அதிகரித்துவிட்டது. இந்த நிறுவனம் பா.ஜ. தலைவர் நவீன் ஜெயின் என்பவருக்குச் சொந்தமானது. திட்டப்பணி ஒப்படைக்கப்பட்ட போது ஆக்ரா மேயராக இருந்தவர் தான் நவீன் ஜெயின். இதேபோன்று, ஐ.ஆர்.பி. இன்ஃப்ரா ஸ்டிரக்சர் டெவலப்பர்ஸ், ஜெ குமார் இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ், லார்சன் அண்ட் டூப்ரோ மற்றும் எம்கேசி இன்ப்ரா ஸ்டிரக்சர் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும் பாரத் மாலா திட்டப்பணிகள் ஒப்படைக்கப்பட்டதில் விதிகள் மீறப்பட்டு முறைகேடு நடந்துள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. இவ்வாறு விதிகளை மீறி திட்டப் பணிகளை ஒப்படைத்ததற்கு காரணம், இந்த 4 நிறுவனங்களும் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.77 கோடி கொடுத்திருக்கின்றன என்று குற்றம் சாட்டப்படுகிறது.

### அதானி தலைமையில் இணைந்த நிறுவனங்கள்

திட்டப் பணிகளுக்கு விண்ணப்பித்த நிறுவனங்களின் கூட்டமைப்பில் அதானி நிறுவனம் வைத்துள்ள பங்கு 74 சதவீதம். இவ்வாறு நெடுஞ்சாலைத்துறை பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அந்தத் துறையில் குறைந்த பட்சம் 6 ஆண்டுகளாவது அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பது விதி. ஆனால் இந்த அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத, நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட சாலை பணிகளில் ஈடுபட்டிராத அதானி நிறுவனம் தான் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் பெற்றுள்ள நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கு தலைமை ஏற்றுள்ளது.

அதாவது அதானி நிறுவனத்துக்கு சாலை பணிகளில் அனுபவம் இல்லாதபோதும், பிறதுறை நிறுவனங்களுடன் இணைத்து சம்பந்தப்பட்ட துறை அனுபவங்களை தனதாக்கி எந்த வகையிலாவது சம்பந்தம் இல்லாத திட்டங்களை கூட டெண்டர் எடுத்து விடுகிறது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்.எச்.ஏ.ஐ) திட்டத்தின் மொத்த செலவினத்தில் 40 சதவீத பங்களிப்பை வழங்கும். எஞ்சிய 60 சதவீதம் சாலை மேம்பாட்டு திட்டப் பணியில் ஈடுபடும் நிறுவனம் ஏற்க வேண்டும். இந்த 60 சதவீதத்தில் 20 முதல் 25 சதவீத தொகையை தன்னிடம் இருந்த நிதியிலிருந்து எடுத்துக்கொண்டு எஞ்சிய தொகையை வங்கிகளில் கடனாக பெறுவது வழக்கம்.

### குறைந்த பிரீமியம் குறிப்பிட்டும் கைமாறிய டெண்டர்

லக்னோ வட்டச்சாலை (ரிங் ரோடு) திட்டப் பணியின் ஒரு பகுதி பணிக்கு கடந்த 2019 மார்ச் 7ம் தேதி டெண்டர் வெளியிடப்பட்டிருந்தது. திட்ட மதிப்பீடாக ரூ.904.31 கோடி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதைவிட அதிகமாக ரூ.1,062 கோடி மதிப்புக்கு பி.என்.சி. இன்போடெக் நிறுவனத்திற்கு திட்டப் பணி வழங்கப்பட்டுள்ளது. இது முதலில் நிர்ணயித்த தொகையை விட 17.44 சதவீதம் அதிகமாகும். இந்த ஐ.ஆர்.பி. இன்ஃப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக கடந்த 2013ம் ஆண்டு முதல் இதுவரை ரூ.65 கோடி வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் ஹாப்பூர் பைபாஸ் - மொராதாபாத் நெடுஞ்சாலை திட்டப் பணியை ஏற்றுள்ளது.

அதுவும் 68 சதவீதம் குறைந்த பிரீமியத்துக்கு எடுத்துள்ளது. அதாவது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தத் திட்டத்திற்கு டெண்டர் வெளியிடும் போது, சாலை திட்டத்தை முடித்த பிறகு அரசுக்கு இந்த நிறுவனம் ஆண்டு பிரீமியமாக ரூ.97.99 கோடி செலுத்த வேண்டும். பின்னர், 22 ஆண்டுகளுக்கு சுங்க கட்டணமாக வசூலித்துக் கொள்ளலாம். ஆனால், 2018ம் ஆண்டில், இந்த நிறுவனம் சமர்ப்பித்த டெண்டரில் ஆண்டு பிரீமியமாக ரூ.31.5 கோடி மட்டுமே வழங்குவதாக குறிப்பிட்டிருந்தும், நெடுஞ்சாலை ஆணையம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. திட்டப் பணி நடைபெற உள்ள சாலையில் செல்வதாக உத்தேசிக்கப்படும் வாகன போக்குவரத்து மற்றும் விரிவான திட்ட அறிக்கையின்படி உள்ள மொத்த விலை புள்ளி அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

அதேநேரத்தில், ஐ.ஆர்.பி. நிறுவன இணையதளத்தில் மேற்கண்ட திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ.3,345 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளாகவே இந்த முடிவுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வந்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் தவறுகள் இருந்த போதிலும் எந்த ஒரு நியாயமான காரணமோ அல்லது மறு டெண்டர் விடுவதற்கான முயற்சியிலோ ஈடுபடாமல் அவசரகதியில் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டது குறித்து சிஏஜி அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் திட்டத்தை வடிவமைத்து அதனை கட்டி முடித்து இயக்குவது மற்றும் ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட கால அளவு வரை சோதனை சாவடி மூலம் வருவாய் ஈட்டிக் கொள்வது பின்னர் அரசிடம் திட்டத்தை ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தான் மேற்கண்ட திட்டம் டெண்டர் விடப்பட்டுள்ளது. ஐ.ஆர்.பி. இன்ப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் கடந்த 2020-21 நிதியாண்டில் பா.ஜ.வுக்கு ரூ.20 கோடியும் இதனுடன் தொடர்புடைய 3 நிறுவனங்கள் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை ரூ.45 கோடியும் கட்சி நிதியாக வழங்கியிருக்கின்றன. கட்சி நிதியும். அதானியுடன் கூட்டும் தகுதியாகுமா? கடந்த 2018 டிசம்பர் மாதம் ஜெ குமார் இன்ப்ரா ப்ரா ஜெக்ட் நிறுவனம் துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தின் ஒரு பகுதியை ரூ.1,349 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் எடுத்திருந்தது.

இந்தத் திட்டப் பணியை கைக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் சுரங்கப்பாதை அமைப்பதில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அடிப்படை விதியை கூட பூர்த்தி செய்யாத இந்த நிறுவனம் திட்ட பணியை கைப்பற்றியுள்ளது. இந்த நிறுவனம் கடந்த 2013ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கி இருக்கிறது. இதுபோல் 2017-18 நிதியாண்டில் ரூ.5.25 கோடி, 201516 நிதியாண்டில் ரூ.1 கோடி மற்றும் 2013-14 நிதியாண்டில் ரூ.21 லட்சம் கட்சி நிதியாக வழங்கி இருக்கிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக ராகு சந்திரா உள்ளார். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவராக 2015ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார்.

மேலும் ஜி.ஆர். இன்ப்ரா ஸ்டிரக்சர் ப்ராஜெக்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜி.ஆர். ஹைவேஸ் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர் நிறுவனத்துக்கு கூடுதல் இயக்குனராகவும் இருந்தவர். இதுபோல் வெல்ஸ்புன் என்டர்பிரைஸ் நிறுவன இயக்குநராகவும் உள்ளார். அதானி குழுமமும் வெல்ஸ்புன் நிறுவனமும் இணைந்து அதானி வெல்ஸ்புன் துரப்பன நிறுவனம் என்ற பெயரில் எரிவாயு துரப்பன பணிகளில் ஈடுபட்டுள்ளன. இது தவிர ஜெ குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனம் மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வர்த்தகம் செய்து வருகிறது. மிச்சிகன் இன்ஜினியர்ஸ் நிறுவனம் வெல்ஸ்புன் என்டர்பிரைசில் 50.10 சதவீதம் பங்கினை கொண்டுள்ளது. ஜெ குமார் நிறுவனம் பா.ஜ.வுக்கு கட்சி நிதியாக ரூ.6.46 கோடி வழங்கியுள்ளது.

இதுஒருபுறம் இருக்க, ஜெ குமார் இன்ப்ரா புராஜெக்ட் நிறுவனத்தை மும்பை மாநகராட்சி கடந்த 2016ம் ஆண்டு தடைப் பட்டியலில் வைத்திருந்தது. 2015ம் ஆண்டு நடந்த சாலை திட்ட ஊழல் விவகாரத்தை தொடர்ந்து இந்த முடிவை மும்பை மாநகராட்சி அப்போது எடுத்திருந்தது. கடந்த 2021ம் ஆண்டு மும்பையில் பாலம் ஒன்று இடிந்து விழுந்து நொறுங்கியது. இந்த பாலம் ஜெ குமார் நிறுவனத்தால் கட்டப்பட்டது. இந்த நிறுவனத்துக்கு திட்டத்தை வழங்கியதற்கு, பா.ஜ. தலைமையிலான அப்போதைய மகாராஷ்டிர அரசை எதிர்க்கட்சியினர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தனர்.

*எம்.கே.சி. இன்ப்ராஸ்டிரக்சர் மற்றும் லார்சன் அண்ட் டூப்ரோ டெல்லி - வதோதரா இடையிலான விரைவு சாலை திட்டத்தில் ஜியாங் சி கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், எம்.கே.சி. இன்ப்ராஸ் ஸ்டிரக்சர், ஜி.ஆர். இன்ப்ரா ப்ராஜெக்ட்ஸ், லார்சன் அண்ட் டூப்ரோ (எல் அண்ட் டி) மற்றும் ஜி.எச்.வி. இந்தியா ஆகிய நிறுவன ங்களின் கூட்டமைப்புக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் டெண்டர் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது. இந்த நிறுவனங்களில் லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் 201415 நிதியாண்டில் பா.ஜ.வுக்கு ரூ.5 கோடி, எம்.கே.சி. இன்ப்ரா ஸ்டிரக்சர் நிறுவனம் 2018 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு இடையே ரூ.75 லட்சம் கட்சி நிதியாக வழங்கியிருந்தனர்.

டெல்லி - வதோதரா விரைவுச் சாலை திட்டத்தின் மதிப்பு ரூ.32,839 கோடி. கட்டுமானச் செலவு ரூ.11,209.21 கோடி. மேற்கண்ட சாலைத் திட்டத்தில் வழங்கப்பட்ட 31 திட்டப் பணிகளுக்கு சேர்த்து மேற்கண்ட மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த 2019 மே மாதம் முதல் 2020 ஜூன் மாதம் வரை வழங்கப்பட்ட 8 திட்டங்களில் முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது. அதாவது டெண்டர் வெளியிடுவதற்கு முன்பு புதிய மதிப்பீட்டுக்கான கட்டணங்கள் இருந்த போதிலும் ஏற்கெனவே நிர்ணயித்த பழைய கட்டணத்தின் அடிப்படையில் இந்த டெண்டர் விடப்பட்டுள்ளது என சி.ஏ.ஜி. தெரிவித்துள்ளது.

மேற்கண்ட 8 திட்ட பணிகளில் 5 பணிகள் ஜி.ஆர். இன்பிரா ப்ராஜெக்ட்ஸ், ஜி.எச்.வி. இந்தியா மற்றும் எல் அண்ட் டி தலா 1 மற்றும் எம்கேசி இன்ப்ராஸ்டிரக்சர் 2 பணிகளை ஏலம் எடுத்துள்ளன. உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கூடிய அளவிற்கு இந்த ஊழல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஒன்றிய அரசின் ஆதரவுடன் மின்துறை, துறைமுகங்களை தொடர்ந்து அடுத்தடுத்து ஒவ்வொரு துறையாக அதானி நிறுவனம் கபளீகரம் செய்து வருகிறது. சமீபத்தில் கூட, மும்பையில் தாராவி குடிசை மேம்பாட்டு திட்டப் பணிகளை ஷிண்டே தலைமையிலான பா.ஜ. கூட்டணி அரசு கொடுத்ததற்கு கடும் எதிர்ப்புகள் நிலவி வருகின்றன.

இதனால்தான், அதானிக்கு மட்டும் விதிகளை மீறி சலுகைகளை அள்ளித்தருவதன் மர்மம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒற்றை விரலை நீட்டி மற்றவர்களை குறை சொல்லத் தொடங்குபவர்கள் தன்னை நோக்கி மற்றவர்கள் நீண்டிருப்பதை மறந்து விடுகிறார்கள் என்ற பொன்மொழி பா.ஜ.வுக்கு முற்றிலும் பொருந்தும் என்று அரசியல் நோக்கர்கள் பலரும் தெரிவிக்கின்றனர். சாதனை என்றால் தங்களுக்கே சொந்தம் என தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஒன்றிய அரசு, குறைகள், பிரச்சினைகள் ஏற்பட்டால் அதன் பழி மொத்தத்தையும் முந்தைய ஆட்சியாளர்கள் மீது போடுவது எந்த விதத்தில் நியாயம்? எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

### தவறான ஆவணங்கள்... தரமற்ற பணி

ஜி.ஆர். இன்ப்ரா புராஜக்ட் நிறுவனம் பீகார் மாநிலம் கிஷன்கஞ்ச்சில் கட்டிய பாலம் கடந்த ஜூன் மாதம் இடிந்து விழுந்தது. இதன்பிறகு, தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து திட்ட தொகையை பெற்றதாக எழுந்த புகாரை தொடர்ந்து, இந்த நிறுவனத்தில் சி.பி.ஐ. ரெய்டு நடத்தப்பட்டது. இதேபோன்றுதான், ஜி.எச்.வி. இந்தியா நிறுவன மும், நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக வெளியான விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும், விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்பாகவே, தவறான ஆவணங்களின் அடிப்படையில் டெண்டர் இறுதி செய்யப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டியுள்ளது.

இதுமட்டுமின்றி, கடந்த 2018ல் கே.ஆர்.சி. இன்ப்ரா நிறுவனத்துக்கு குவாலியர் - ஷிவ்புரி நெடுஞ்சாலையில் 4 கி.மீ சாலை அமைக்க ரூ.18.39 கோடி ஒப்பந்தத்தை வழங்கியது தொடர்பாகவும் சி.ஏ.ஜி. விமர்சனம் செய்திருந்தது. மேலும், லக்னோ வட்டச்சாலை திட்டப்பணியில் டெண்டரில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தவறாக இருந்தபோதிலும், திட்டத்தை இந்த நிறுவனத்திடம் நெடுஞ்சாலை ஆணை யம் ஒப்படைத்துள்ளது. இதுபோல், சுராசந்த்பூர் - துய்வாய் திட்டமும் விதிகளுக்கு மாறாக தகுதியற்ற ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என சி.ஏ.ஜி. தெரிவித்துள்ளது. சுராசந்த்பூர் - துய்வாய் மற்றும் சித்தூர் - மல்லாவரம் திட்டங்கள், விரிவான திட்ட அறிக்கை பெறுவதற்கு முன்பாகவே ஒப்படைக்கப்பட்டுள்ளன என சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது.

நன்றி :
**'தினகரன்'**
28,08,2023



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 27.08.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர், நாகர்கோவில் மாநகர மேயர் ரெ.மகேஷ் ஆகியோர் முன்னிலையில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். உடன் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), எம்.ஆர்.காந்தி (நாகர்கோவில்) உட்பட பலர் உள்ளார்கள்.



விபத்தில் காயம் அடைந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நெல்லை மாவட்டம் வள்ளியூர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அரசு உண்டு உறைவிட பள்ளி மாணவ – மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.உடன் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,ஒன்றிய செயலாளர் முருகன்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி,முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் முருகன்,மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் கோபி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சிவானந்த பெருமாள்,தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயபிரகாஷ், முத்துராமலிங்கம், விக்னேஷ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.


நாள். 29.08.2023 செவ்வாய்க்கிழமை – கடலூர் மாவட்டம்
கடலூர் மாவட்ட திமுக இளைஞரணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும்
கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும்
பல்வேறு துறைகளின் ஆய்வுக் கூட்டத்திற்கும் வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக. வருக.. என அன்புடன் வரவேற்கும்
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., BL.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் – மாவட்டக் கழகச் செயலாளர்
ARASU ARTS
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு!

# இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வரின் பணிகள் நமக்கு எழுச்சியூட்டும்!

### கழகத் தலைவருக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஆக. 29 -

கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமது ட்விட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி.,"ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன" என குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

**பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் கட்டிக் காத்த நம் தி.மு.கழகத்தின் தலைவராக ஐந்தாண்டுகள் சிறப்புற பணியாற்றி, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.**

**இந்திய ஜனநாயகம் கடும் நெருக்கடியைச் சந்தித்து வரும் வேளையில், ஒன்றுபட்ட இந்தியாவை மீட்டெடுக்கும் அவரது அரசியல் பணிகள் நமக்கு எழுச்சியூட்டுகின்றன.**

இவ்வாறு அவர், தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## சமத்துவம் - வளர்ச்சி - ஒற்றுமை நிறைந்த

# இந்தியாவை மீட்டெடுக்க உறுதியேற்போம்!

### மலையாளச் சொந்தங்களுக்கு முதல்வர் ஓணம் திருநாள் வாழ்த்து!

சென்னை,ஆக. 29-

ஓணம் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "சமத்துவமும் வளர்ச்சியும் ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்போம்" என குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓணம் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கேரள மக்கள் அனைவராலும் எழுச்சியோடும் ஒற்றுமையோடும் கொண்டாடப்படும் அறுவடைப் பெருவிழாவாம் ஓணம் திருநாளை முன்னிட்டு மலையாள சொந்தங்கள் அனைவருக்கும் எனது ஓணம் வாழ்த்துகள்!

ஓணத்திருநாள் அன்று, தமிழ்நாட்டில் மலையாள மொழி பேசும் மக்கள் நிறைந்து வாழும் மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களுக்கு 2006ஆம் ஆண்டும், தலைநகர் சென்னைக்கு

2007ஆம் ஆண்டும் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான் விடுமுறை அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அறுவடைத் திருநாளாக மட்டுமல்லாமல், வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்ட திராவிட மன்னனான மாவேலியைக் கேரள மக்கள் அன்போடு வரவேற்கும் விழாவாகவும் குறியீட்டளவில் ஓணம் கொண்டாடப்படுகிறது. இத்தகைய ஓணம் திருநாள் சங்க இலக்கியமான மதுரைக்காஞ்சியிலும் "மாயோன் மேய ஓண நன்னாள்" எனச் சிறப்புடன் பாடப்பட்டிருக்கிறது. இவ்வாறு திராவிடப் பண்பாட்டுடன் பிரிக்க முடியாது, இரண்டறக் கலந்துள்ள ஓணத்தையும் விட்டுவைக்காமல், ஒரு தரப்பினர் 'வாமன ஜெயந்தி' என அதன் அடையாளத்தைப் பறிக்க முயல்கிறார்கள். கேரள மக்களே இத்தகைய குயுக்தி முயற்சிகளைப் புறக்கணிப்பார்கள்.

மக்களைப் பிளவுபடுத்தி, அதில் குளிர்காய நினைக்கும் சுயநல வஞ்சகர்கள் வீழ்ந்துபடும் ஓணமாக வரும் ஓணம் அமையும் வகையில் நாட்டு மக்கள் விழிப்புணர்வு அடைந்து வருகிறார்கள்.

சமத்துவமும், வளர்ச்சியும், ஒற்றுமையும் நிறைந்த இந்தியாவை மீட்டெடுக்க நாம் அனைவரும் உறுதியேற்கிற நாளாக இந்த ஓணத் திருநாள் அமையட்டும்! நம் தென்னாட்டு மக்கள் காட்டிய முற்போக்கு அரசியல் பாதையில் ஒட்டுமொத்த இந்தியாவும் பயணிக்கும் ஆண்டாக வருகிற ஆண்டு திகழட்டும்!

திராவிட மொழிக் குடும்பத்தின் உடன்பிறப்புகளான கேரள மக்கள் அனைவருக்கும் மீண்டுமொருமுறை எனது ஓணம் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## 'இண்டியா' அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கூட்டத்தில் பங்கேற்க

# மும்பை வரும் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினருக்கு - மும்பை புறநகர் அலி சேக் மீரான் - மாநகரச் செயலாளர் கடவூர் பழனிச்சாமி வேண்டுகோள்!

மும்பை, ஆக. 29 -

மும்பையில் நடைபெறும் 'இண்டியா' அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டத்தில் கலந்துகொள்ள ஆகஸ்ட் 31 அன்று மும்பைக்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அளிக்கப்படும் எழுச்சிமிகு வரவேற்பில் கழகத்தினரும் தமிழர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு மும்பை புறநகர் மாநிலச் செயலாளர் அலி சேக் மீரான், மும்பை மாநகரச் செயலாளர் கருவூர் பழனிச்சாமி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மராத்திய மாநிலம் மும்பைக்கு வருகிற 31 ஆம் தேதி வியாழக்கிழமை வருகை தருகிறார். அன்று காலை 11 மணியளவில் மும்பை சர்வதேச விமான நிலையம் ( சஹார் முனையம் 2) வருகிறார் கழகத் தலைவர்.

31.08.2023 மற்றும் 01.09.2023 ஆகிய இரண்டு நாட்கள் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசின் சீர்கெட்ட ஆட்சிமுறையிலிருந்து நாட்டைக் காக்கவும்; இனம், மதம், மொழிப் பாகுபாடற்ற மனிதநேயம் நிறைந்த நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காகவும், ஒத்த கருத்துகளையுடைய இருபத்தியாறு (26) அரசியல் கட்சிகளை இணைத்து உருவான 'இண்டிகா' (I.N.D.I.A.) அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக மும்பைக்கு வருகை புரிகிறார்.

அவ்வேளையில், நமது இயக்கத்தின் தலைவரை; 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை; மும்பை விமான நிலையத்தில் நிர்வாகிகள், துணை மற்றும் கிளை அமைப்புகளின் நிர்வாகிகள், கழகத் தோழமைகள், மும்பைவாழ் தமிழ்மக்கள் புடைசூழ கலந்துகொண்டு வரவேற்று நமது மகிழ்வையும் பேராதரவையும் தெரிவிக்கும்படி மும்பை ,நகர புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## மதுரை மேலூரில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

# 3000 பேருக்கு பொற்கிழி - சேலம் மாநாட்டில் 50ஆயிரம்பேர் பங்கேற்பு!

### வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தீர்மானத்தை விளக்கி சிறப்புரை!

மதுரை, ஆக 29-

மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மதுரை திருப்பாலை குறிஞ்சி திருமண மண்டபத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் கருதியாகராஜன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேரு பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரும் 20ஆம் தேதி மேலூருக்கு வர உள்ளார்கள் அவருக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்து மூன்றாயிரம் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கழகத்தினருக்கு நிதி வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சிகளிலும் 25 ஆயிரம் பேர் பங்கேற்பது என்றும், வரலாற்று சிறப்புமிக்க சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் சீருடையுடன் 20ஆயிரத்து 625 பேர் உள்ளிட்ட 50ஆயிரம் பேர் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானத்தை விளக்கி மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார், அதன் விபரம் வருமாறு:-

மதுரை மேலூரில் வரும் இருபதாம் தேதி கழக இளைஞரணி செயலாளர், தமிழகத்தின் எதிர்பார்ப்பு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, மேலூர், சோழவந்தான் தொகுதிகளில் உள்ள மூத்த கழக முன்னோடிகளுக்கு தொகுதிக்கு ஆயிரம் பேர் என 3000 பேருக்கு பொற்கிழி வழங்கி பாராட்டி சிறப்புரையாற்ற உள்ளார். இதே போல் மூன்று தொகுதிகளுக்கு உட்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் என பூத்துக்கு 25 பேர் வீதம் தேர்வு செய்து பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞரணி செயலாளர், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி கௌரவிக்க உள்ளார்கள்.

அதேபோல் வரலாற்று சிறப்புமிக்க மாநில இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் எழுச்சியுடன் டிசம்பர் மாதம் 17ஆம் தேதி நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் சீருடை அணிந்து 20ஆயிரத்து 625பேர் உள்ளிட்ட ஐம்பதாயிரம் பேர் மாநாட்டில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும். இந்த இளைஞரணி மாநில மாநாடு வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும், 40ம் நமதே நாடும் நமதே என்று முழக்கமிடும் நம் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றி, இந்தியா கூட்டணியில் இந்தியாவில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும் வகையில் அமையும் என்றும் சேலம் இளைஞர் அணி மாநாடு மதுரையில் நடைபெற்ற அதிமுக மாநாட்டை விட பலமடங்கு பிரம்மாண்டமாய் அமைந்து சரித்திரத்தில் இடம்பெறும் என கூறினார்.

இக்கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என திரளானோர் பங்கேற்றனர்

## உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் - ஈட்டி எறிதலில்

# தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு பாராட்டு!

### முதல்வர் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 29-

உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

உலகத் தடகள சாம்பியன் ஷிப்பில் தங்கம்வென்றமுதல் இந்தியராக வரலாறு படைத்து, இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ள ஈட்டி எறிதல் வீரர் நீரஜ்சோப்ரா அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

உங்களது அர்ப்பணிப்புணர்வும்



இமாலய சாதனைகளும் உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவின் நிலையைத் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# எஸ்.காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி 11ஆம் ஆண்டு நினைவேந்தல்!

### மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், ஆக. 29-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முகவை மாவட்டத்தில் கழக வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய முதுகுளத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை பொதுக்குழு, செயற்குழு மற்றும் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினரும், எனது தந்தையாருமான எஸ்.காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதம் 31ந் தேதி நடைபெறுவதும், மாவட்டக் கழகம் சார்பில் நினைவேந்தல் அனுசரிக்கப்படுவதும் வழக்கம்.

அதைப்போலவே 31.08.2023வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் கமுதி வட்டம், காவடிப்



பட்டி கிராமத்தில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் 11ஆம் ஆண்டு நினைவுதினம் அனுசரிக்கப்பட உள்ளது.

எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உற்றார் உறவினர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி!

# வரலாற்றுச் சாதனை புரிந்த இந்திய அணியைப் போற்றுகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 29 -

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் தொடர் ஓட்ட அணியைப் பாராட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

உலக தடகள சாம்பியன்ஷிப்பில் **வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள இந்திய ஆடவர் 4 x 400 தொடர் ஓட்ட அணியினரைப் போற்றுகிறேன்.**

**ஆசிய அளவிலான புதிய சாதனையைப் படைத்து, ஓட்டப்பந்தயத்தில பல முன்னணி நாடுகளை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்குள் நமது அணியினர் நுழைந்துள்ளனர்.**

**இதற்காக, முகம்மது அனஸ் யாஹியா, அமோஜ் ஜேக்கப், முகம்மது அஜ்மல் மற்றும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரரான**




**ராஜேஷ் ரமேஷ் ஆகிய நால்வருக்கும் அவர்களது அபாரமான ஓட்டத்துக்காகப் பாராட்டுகள்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வரி செலுத்தாத வணிகர்களின்

# சொத்துக்கள் ஏலம்!

### வணிகவரி ஆணையர் அறிவிப்பு!

சென்னை, ஆக.29-

வணிகவரித்துறை சென்னை (வடக்கு) கோட்டத்தில் வரி செலுத்தாத வணிகர்களின் சொத்துக்கள் ஏலம் விடப்பட்டு அரசுக்கு 3.90 கோடி ரூபாய் வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

வணிகர் விதிக்கப்பட்ட ஆணையின்படி வரிபாக்கியினை செலுத்தாததால் சௌகார்பேட்டை பகுதியில் அமைந்துள்ள வணிகரது சொத்துக்கள் கண்டறியப்பட்டு முடக்கப்பட்டன.

கடந்த 10 வருடங்களாக நிலுவையிலுள்ள வரி பாக்கியை வசூல் செய்வதற்கு, வணிகவரி துறை அலுவலர்களால் தொடர் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வணிகரது சொத்துக்களின் மீது வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த 21.07.2023 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் வணிகரது மூன்று சொத்துக்கள் ஏலம் விடப்பட்டு ரூ.3 கோடியே 90 லட்சம் வரி பாக்கி வள்ளலார் நகர் மாநில வரிவிதிப்பு வட்ட வரி அலுவலரால், வசூல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.



மதுரை வடக்கு மாவட்டம் மேலூரில் வரும் 20ந்தேதி கழக இளைஞர்அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொற்கிழி வழங்கும் விழாவை சிறப்பாக நடத்துவது,சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டில் 50ஆயிரம் பேர் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்களை விளக்கி வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றிய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், கரு.தியாகராஜன், ஜி.பி.ராஜா, நேருபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் திரளான கழகத்தினர் உள்ளனர்.



தேனி தெற்குமாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வரதராஜபுரம் விலக்கில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 11 லட்சம் மதிப்பீட்டில் புதிய பயணியர் நிழற்குடையை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் திறந்து வைத்தார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பா.ஜ.க. ஆட்சியில் குஜராத் அரசு கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது!

# அதானி நிறுவனத்துக்கு நிலக்கரி வாங்கியதில் கூடுதலாக ரூ.3802 கோடி!

## குஜராத் பா.ஜ.க. அரசு மீது ஆதாரங்களுடன் மாநில காங்கிரஸ் குற்றச்சாட்டு!

அகமதாபாத், ஆக. 29-

"பா.ஜ.க. ஆட்சியில் குஜராத் அரசு கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது" அதானி நிறுவனத்துக்கு நிலக்கரி வாங்கியதில் கூடுதலாக ரூ.3802 கோடி செலவிடப்பட்டுள்ளது" என குஜராத் பா.ஜ.க. அரசு மீது ஆதாரங்களுடன் மாநில காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அதானிக்குச் சொந்தமான அதானி பவர் முத்ரா லிமிடெட் (ஏ.பி.எம்.யூ.எல்.) நிறுவனத்துக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் எரிசக்திக் கட்டணமாக ரூ.3802 கோடி கூடுதலாக குஜராத் மாநில உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் வழங்கியுள்ளதாக ஆதாரங்களுடன் அம்மாநில எதிர்க் கட்சியான காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஆளும் பா.ஜ.க. அரசின் ஆதரவுடன், அப்பட்டமாக நடைபெற்ற லஞ்ச ஊழல் இது என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் சக்திசிங் கோஹில் குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் குஜராத் அரசு நிறுவனமான உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் எழுதிய கடிதம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் எரிசக்தி கட்டணமாக அதிகப்படியாக பெறப்பட்ட தொகை ரூ.3802 கோடியை உடனடியாக திருப்பிச் செலுத்த வேண்டும் என்று அதானி நிறுவனத்துக்கு எழுதப்பட்டுள்ளது.

குஜராத் அரசு நிறுவனத்துக்கும் அதானி நிறுவனத்துக்கும் இடையே மின்சாரம் வாங்குவது தொடர்பாக இரு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு அதன் அடிப்படையில் தரப்பட்ட தொகையில் இந்த கூடுதல் தொகை தரப்பட்டுள்ளது.



Ahmedabad Mirror

ADANI NAILED?

Rs 3800cr of excess payment made to Adani

Allegations baseless, payment made is only 'interim': Govt

மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் கோஹில், சந்தை விலையை விட அதிக விலை கொடுத்து இந்தோனேஷியாவிலிருந்து நிலக்கரி வாங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதில் அதிர்ச்சியூட்டும் செய்தி என்னவெனில், 'நிலக்கரி வாங்குவது தொடர்பான ஆவணங்கள் மற்றும் 'இன்வாய்ஸ்கள்' அனைத்தையும் அதானி நிறுவனத்திடம் குஜராத் உர்ஜா விகாஸ் நிகாம் லிமிடெட் கேட்டுள்ளது என்பதுதான்.

சந்தை விலைக்கு தொடர்பின்றி அதிக விலை கொடுத்து தொடர்ந்து அதானி நிறுவனங்கள் சில தேர்வு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் நிலக்கரி வாங்கி வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2018 முதல் 2023 வரையிலான 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.13,802 கோடியை அதானி நிறுவனத்துக்கு, குஜராத் நிறுவனம் அளித்துள்ளது. முறைப்படி எந்தவிதமான ஆவணங்களோ, இன்வாய்ஸ்களோ அளிக்கப்படாத நிலையிலும் இந்தத் தொகை அதானி நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளதாக கோஹில் மேலும் குற்றம் சாட்டுகிறார்.

முறையான ஆவணங்கள் இல்லாமல் இருக்கும் நிலையில் எப்படி பணத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்குவது என்று அதிகாரிகள் தயங்கிய நிலையில் அவர்கள் பணத்தை வழங்க கட்டாயப்படுத்தி இருக்கக்கூடும் என்றும் கோஹில் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

எரிசக்தித்துறை முதலமைச்சர் அலுவலகக் கட்டுப்பாட்டில் இருக்கிறது; எனவே அதானி நிறுவனத்துக்கு பணத்தை வழங்குமாறு முதலமைச்சர் அலுவலகம் கட்டாயப்படுத்தி இருக்கும் என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் சக்தி சிங் கோஹில் குறிப்பிட்டுள்ளார்.

அதானி நிறுவனம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளது என்று குறிப்பிடும் அவர், மற்ற இடங்களில் உடனுக்குடன் சோதனைகள் மேற்கொள்ளும் சி.பி.ஐ.யோ அல்லது இ.டி.யோடு, இந்தப் பிரச்சினையில் உடனடியாக செயல்படாதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அநேகமாக, ஹிண்டுஸ்பர்க் ஆய்வு மையம் இதுகுறித்து வெளிப்படுத்திய பின்னர் குஜராத் அரசு விழித்துக் கொள்ளுமோ என்றுதான் கூறத் தோன்றுகிறது என்று கோஹில் குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் கீழ், குஜராத் அரசு, கௌதம் அதானி அரசாக மாறிவிட்டது என்று குற்றம்சாட்டும் அவர், அதானிக்கும் குஜராத் அரசுக்கும் இடையேயான இணக்கம் குறித்து நிரூபிக்க தேவையான ஆவணங்கள் அனைத்தும் காங்கிரஸ் கட்சி யிடம் உள்ளன எனவும் தெரிவித்தார்.

மேற்கண்டவாறு 'அகமதாபாத் மிர்ரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

---

### வரலாற்றில் எழுதப்பட வேண்டிய சாதனை

# சமத்துவ சமூகத்தை கட்டமைக்கும் காலை உணவுத் திட்டம்!

## 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் புகழாரம்!

சென்னை, ஆக.29-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த பள்ளி மாணவ-மாணவியர்களுக்கான காலை உணவுத் திட்டமானது சமூக சமத்துவத்தை கட்டமைக்கும் விதத்தில் செயல்படுத்தப்படுவதாக 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் தமிழ்நாடு ஆசிரியர் ஆன்டோ டி.ஜோசப் புகழாரம் சூட்டியுள்ளார்.

அது குறித்த விபரம் வருமாறு :

ஆட்சியில் அமர்ந்த அரசியல் கட்சிகள் பசித்தவர்களுக்கு உணவளிக்க முடிவு செய்யும் போது, எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட மற்றவர்கள் எரிச்சலடைவது இயல்பு. காரணம் மிக எளிதானது. அதாவது, சமூக நலத் திட்டங்கள் பொதுவாக மக்கள் மத்தியில் செல்வாக்கை ஏற்படுத்தி வாக்குகளை பெற்றுத்தரும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன. நிதி முறைகேடு என்ற கூக்குரலை எழுப்புவது, கருவூலத்தின் நிலை மோசமடைந்து வருவது, அதிகரித்து வரும் கடன் சுமை மீது கவனம் செலுத்துவது ஆகியவை எதிர்க்கட்சிகளின் கடமையாகும்.

ஆனால் அரசின் திட்டங்களை 'இலவசம்' அல்லது 'இலவச கலாச்சாரம்' என்று சொல்வதால் இறுதி பயனாளிகளான சாமானிய மக்களின் கோபத்தை அந்த விமர்சனங்கள் பெறுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பணிபுரியும் பெண்களுக்கான மானிய ஸ்கூட்டர் திட்டத்தைத் தொடங்கி வைத்தவருக்கு (அ.தி.மு.க) மற்ற அரசுகள் முன்வைக்கும் சமூக நலத் திட்டங்களை நிராகரிக்க உரிமை உள்ளதா என்ற கேள்விக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை.

இந்த விஷயத்தில் மு.க.ஸ்டாலின் அவர்களது உறுதி தெளிவாக உள்ளது. எந்த மாணவனும் பள்ளிக்கு படிக்க வரும்போது பசியுடன் வரக்கூடாது என்ற அந்த நிலைப்பாடு கட்சியின் கொள்கை வேறுபாடின்றி மக்களின் கருத்துக்களுடன் ஒருங்கிணைந்து எதிரொலிக்கிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மாணவர்களுக்கு மதிய உணவை அறிமுகப்படுத்திய அரசு, புதிய காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, 31,000 பள்ளிகளில் உள்ள 17 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு அதை விரிவுபடுத்தும்போது, அதை யாரால் மறுதலிக்க முடியும்? இது எதிர்காலத்திற்கான முதலீடு ஆகும்.



HOW A BREAKFAST COULD HERALD A HEALTHY, EGALITARIAN SOCIETY

ANTO T JOSEPH

It is an investment for the future. At a time when high veggie prices drill holes in home budgets across the country, breakfast and noon meals are eternal saviours.

நாடு முழுவதும் வீட்டு பட்ஜெட்டை பதம் பார்க்கும் வகையில் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ள நிலையில், காலை உணவும், மதிய உணவும் தான் மாணவர்களின் உண்மையான மீட்பர்களாக உள்ளன.

காலை சிற்றுண்டி திட்டம் செயல்பட்டு வரும் நிலையில், கோவையில் உள்ள ஒரு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட சேமியா உப்புமாவில் அதிகமாக தண்ணீர் கலந்திருப்பதாகவும், சரியாக சமைக்கப்படவில்லை என்றும் புகார் வந்தது.

மாணவர்களுக்கு அவ்வாறு சமைக்கப்பட்ட உணவை கொடுத்து ரிஸ்க் எடுக்க தயாரில்லை என்றும், அதன் விளைவாக பள்ளியில் உள்ள 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு நாள் பிஸ்கட் மட்டுமே சாப்பிட வேண்டியதாகி விட்டது என்றும் புகார் கூறப்பட்டது.

அரசின் பல நலத்திட்டங்களால் மாணவர்களின் பள்ளி இடைநிற்றல் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வரும் நிலையில், காலை உணவுத் திட்டம் சுமூகமாக நடைபெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டியது அவசியம். பரிமாறப்படும் உணவுப் பொருட்களின் தரத்தில் உறுதியாக இருப்பதும் அவசியம். ஆரோக்கியமான புதிய தலைமுறையை உருவாக்குவதில் அனைத்து மக்களும் விரும்பக் கூடிய இந்த அரசாங்கம் செயல்படுத்தும் நிகழ்ச்சி நிரல்களில் எல்லாம் முதன்மையானதாக இருக்க வேண்டும்.

மக்கள் நலத் திட்டங்களுக்கான செலவினங்களை சமாளிக்க, கருவூலம் தீர்ந்து விடாமல் சமூக நலத் திட்டங்களுக்கு நிதியளிக்க புதிய வருவாய் வழிகளை அரசு தேட வேண்டியதாக இருக்கும். இந்த நிலையில், இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளிகளும் தங்கள் மாணவர்களுக்கு காலை உணவு மற்றும் மதிய உணவை கட்டாயமாக வழங்குகின்றனவா என்பதை சற்று நினைத்துப் பார்க்கவேண்டும்.

இனம் மற்றும் சாதிய பாகுபாடும் இல்லாமல் எல்லா மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து உணவை சாப்பிடுவதையும் நினைத்துப் பாருங்கள்.

1970களில் ஒரு கேரள கிராமத்தில் உள்ள ஒரு அரசு நடுநிலைப் பள்ளியில் எனது வகுப்புத் தோழர்களுடன் மதிய உணவுக்கு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையால் தயாரிக்கப்பட்ட உப்புமாவை சாப்பிட்ட எனது பள்ளி நாட்களை நினைவில் கொள்கிறேன்.

மு.க.ஸ்டாலின் அரசு தொடங்கியுள்ள காலை உணவுத் திட்டம் ஒரு புதிய விடியலாக அமையட்டும். அது சமூக சமநீதியை, சமத்துவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு புதிய பாதை என்று கூறுவது எந்த வகையிலும் சற்றும் மிகையல்ல.

இவ்வாறு 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் செய்தி வெளியாகியுள்ளது.

---

### கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு!

# இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவரின் வழியில் அயராது உழைப்போம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக, 29-

கழகத் தலைவராக 5 ஆண்டுகள் நிறைவு செய்துள்ள முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டங்களை, செயல்படுத்தும் கழகத் தலைவரின் வழியில்" இந்தியாவிற்கு விடியலை ஏற்படுத்த அயராது உழைப்போம்" என குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து அவரது ட்விட்டர் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் ஒற்றை நம்பிக்கையாம் நம் தி.மு.கழகத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் @mkstalin அவர்கள் பொறுப்பேற்று இன்றுடன் 5 ஆண்டுகளை நிறைவு செய்து ஆறாம் ஆண்டில் நம்மையெல்லாம் வழிநடத்தவுள்ளார்கள்.**

**அரை நூற்றாண்டு காலம் இயக்கத்தை கட்டிக்காத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழி நின்று கழகத்தின் கொள்கையாலும், ஆட்சியில் செயல்படுத்தும் திட்டங்களாலும் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டி வருகிறார் நம் கழகத்தலைவர் அவர்கள்.**

**2019 நாடாளுமன்றத் தேர்தல் - 2021 சட்டமன்றத் தேர்தல் - உள்ளாட்சித் தேர்தல் என களம் கண்ட அத்தனை தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடிய கழகத் தலைவரின் வழிகாட்டுதலோடு 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாசிஸ்ட்டுகளை வீழ்த்தி இந்தியாவுக்கு விடியலை ஏற்படுத்த அயராது உழைப்போம்.**

இவ்வாறு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

---

### திருநெல்வேலி மாவட்டம் - திசையன்விளை - மேம்படுத்தப்பட்ட

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு!

### பணி நேரத்திற்கு வராத மருத்துவர் - மருத்துவமனைப் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு!

*நெல்லை, ஆக.29-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (27.08.2023) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திசையன்விளை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.*

*அப்போது சரியான நேரத்தில் பணியில் இல்லாத மருத்துவர், மருந்தாளுநர் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் அனைவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குனர், சுகாதார பணிகள் அவர்களுக்கு உத்தரவிட்டார்.*

*மேலும் மருத்துவமனை ஆய்வின்போது அங்கு நிறுத்தப்பட்டுள்ள நடமாடும் மருத்துவமனை வாகனத்தில் மருந்து பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு சரிவர பாதுகாப்பின்றி இருந்ததை பார்த்தஅமைச்சர் அவர்கள், அங்குள்ள செவிலியரிடம் விசாரித்த போது அந்த வாகனத்தின் ஓட்டுனர் பணிக்கு வராததையும், அந்த வாகனத்தில் இருந்த மருந்துகள் பாதுகாப்பின்றி இருப்பதை கண்ட அமைச்சர் அவர்கள், அலட்சியத் தன்மையுடன் பணியாற்றியதை அறிந்து, அந்த ஓட்டுநர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களுக்கு உத்தர விட்டார்.*

*மேலும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நாய்க்கடி மற்றும் பாம்புகடி மருந்துகள் கையிருப்பு உள்ளதை பொதுமக்கள் தேவைக்கேற்ப அறிந்து பயன்படுத்தும் வகையில், அதற்குரிய மருந்து இருப்பு அறிவிப்பு பலகைகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வைக்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குனரை அறிவுறுத்தினார்.*

---

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் இன்று (29.8.2023) செவ்வாய் மாலை 4 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

**பொருள்:** முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா செயல்பாடுகள், கழகம் 75 ஆம் ஆண்டு விழா செயல்திட்டங்கள், இளைஞரணிச் செயலாளர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் சேலம் மாநாட்டு ஆக்கப் பணிகள்.

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா கழுகோர்கடையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டிடத்தினை திருமதி.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கேரள மாநிலத்தில் கேரள தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு ஓணம் பரிசு வழங்கும் நிகழ்ச்சி, இடுக்கி மாவட்ட கழக அலுவலகம் திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழாவில் தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான பூச்சி எஸ்.முருகன் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி அலுவலகத்தை திறந்து வைத்து கொடியேற்றினார். கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாநில பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மோகன் தாஸ், ஜெயபால், ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகிக்க இடுக்கி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜனார்த்தனன் வரவேற்புரை நிகழ்த்த, இடுக்கி தெற்கு மாவட்டச் செயலாளர் கனி நன்றியுரை நிகழ்த்தினார். முன்னதாக கேரள மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மது, விபின் முருகேசன், பிரவீன் ராஜ், முன்னாள் மேல்புறம் ஒன்றிய செயலாளர் சிற்றார் ரவிச்சந்திரன், ஜோஸ், தங்கச்சன், அம்முக்குட்டி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


29 – 8 – 2023, செவ்வாய்கிழமை
வெங்கடேஸ்வரா கல்லூரி வளாகம், கழுதூர்
ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க.
இளைஞர் அணி செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு வருகை தரும்
ஈடில்லா இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர்
இனத்தின் அடையாளம் – உயிர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு சி.வெ.கணேசன்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் / கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
வரவேற்று மகிழும்... CVG.வெங்கடேசன் மாவட்ட அமைப்பாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி




நாள் : 29 - 8 - 2023, செவ்வாய்கிழமை
இடம் : வெங்கடேஸ்வரா கல்லூரி வளாகம், கழுதூர்

ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட
தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தரும்



கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

மாண்புமிகு
# உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...

வரவேற்று மகிழும்... **சி.வெ.கணேசன்**
மாவட்டக் கழகச் செயலாளர் / தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

## கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், திருமலைராயபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சிவகுருசாமி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அ.நாசருதீன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவன், கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

### திருச்சி மாவட்டத்தில் - ரோந்துப் பணியின்போது சாலை விபத்தில் உயிரிழந்த

# தலைமைக் காவலர் குடும்பத்திற்கு - ரூ.25 இலட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

திருச்சி, ஆக. 29 -

திருச்சி மாவட்டத்தில் ரோந்துப் பணியின் போது ஏற்பட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை நேற்று முன்தினம் (27.08.2023) வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

திருச்சி மாநகர், அரிய மங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்த ஸ்ரீதர் (வயது 45) கடந்த 3072023 அன்று அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, தலைமைக் காவலர் ஸ்ரீதர் குடும்பத்தினருக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தி ன் கீழ், ஆய்வுப் பணிகளை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பும் வழியில், நேற்று (27.08.2023) திருச்சி விமான நிலை யத்தில், ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை மறைந்த தலைமைக் காவலர் ஸ்ரீதரின் குடும்பத்தினரிடம் வழங்கி ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வின்போது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப்கு மார், திருச்சிராப் பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் திருமதி என். காமினி, ஆகியோர் உடனிருந்தனர்.

### நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில்

# கழக மூத்த முன்னோடிகள் படத்திறப்பு நிகழ்ச்சி!

## டி.பி.எம்.மைதீன்கான் - இரா.ஆவுடையப்பன் தலைமை! சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.ஆக.29-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநகர தி.மு.க. அலுவலகத்தில் இன்று (29.8.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு மறைந்த கழக மூத்த முன்னோடிகள் படத்திறப்பு நிகழ்ச்சிகள் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது என நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் பல போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்,சிறை நிரப்பும் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் என கழகம் கடினமான இருந்த சூழ்நிலையில் நெல்லை மாவட்டத்தில் கழகத்தை முன்னின்று வழி நடத்திய மறைந்த கழக முன்னோடிகளான தம்பிதுரை, டாக்டர்.பத்மநாபன், டாக்டர். சூரியநாராயணன், விஸ்வநாத பாண்டியன், ஆழ்வார், மிசா.சோம திருநாவுக்கரசு, கருப்பையா, மஸ்தான், கா.மு.கதிரவன், நம்பி, ஏ.எல்.சுப்பிரமணியன், உமா மகேஸ்வரி ஆகியோரின் திருஉருவப்படத் திறப்பு விழா நிகழ்ச்சி நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி. எம்.மைதீன்கான், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லட்சுமணன், பேச்சிபாண்டியன், பகுதிச் செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அண்டன் செல்லதுரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம், பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, மாநகர பொருளாளர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் பாளை தொகுதி பார்வையாளர் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், பத்தமடை பரமசிவன், சிவப்பிரகாசம், சுத்தமல்லி மணியாபிள்ளை, குமாரசுப்பிரமணியன்,சுப. சீதாராமன், ஆ.கா.மணி, டாக்டர்.பொன்மணி, அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், வழக்கறிஞர்கள் பொன்னம்பலநாதன், ரவீந்திரநாத், மானூர் ஒன்றிய செயலாளர் அருள் மணி, மாரியப்பன், அன்பழகன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், பேரூர் செயலாளர் சங்கர் நகர் செல்வபாபு, நாரணம்மாள்புரம் பேச்சிகுட்டி ஆகியோர் படத்தை திறந்து வைக்கின்றனர். நிறைவில் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றுகிறார்.

ஆகவே நிகழ்வில் மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகரப் பிரதிநிதிகள், கழக மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மாநகர சார்பு அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கடலூர் மேற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், ஆக. 29-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளரும், தமிழக தொழிலாளர் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார்.

நெய்வேலியில் செப்டம்பர் 10, ஆம் தேதி சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல திருமணம் நடைபெற உள்ளது.

இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்பு உரையாற்றுகிறார். இதில் தமிழக முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்.

கழக இளைஞரணி செயலாளர் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்க உள்ளார். இதில் கழக நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, துணைச் செயலாளர் ஆர்.எஸ்.எம். தணிகை செல்வம், தலைமைச் செயற்குழு பாவாடைகோவிந்தசாமி, வி.கே. வெங்கட்ராமன், நகரச் செயலாளர் பக்கிரிசாமி, தொ.மு.ச. பொதுச்செயலாளர் பாரி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ் குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தென்காசி மாவட்டக் கழக

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி கூட்டம்!

## வே.ஜெயபாலன் - ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.ஆக.29.

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட கழக மகளிர் அணி,மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி இசக்கி மகாலில் இன்று (29ஆம் தேதி) மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி இசக்கி மகாலில் இன்று 29 ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

நிகழ்வில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### கழக அரசின் பொற்கால ஆட்சியில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள் குறித்து மாவட்டந்தோறும் விழிப்புணர்வு கூட்டம்!

## மாற்றுத்திறனாளிகள் மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்! ரெ.தங்கம் அறிவிப்பு!

சென்னை ஆக. 29-

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு கூட்டம், 27.8.2023 ஞாயிற்றுக்கிழமை சென்னை,தி. நகர் தீரர் ஜெ.அன்பழகன் நினைவகம், சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிர்வாகிகள் மறு சீரமைக்கப்பட்டு மாநில தலைவராக ரெ.தங்கம் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

பொதுச்செயலாளர் வழக்கறிஞர் எஸ்.சரவண குமார், பொருளாளராக டாக்டர் எஸ்.நஜிம், துணை பொதுச்செயலாளர்களாக க.இளங்கோவன், ஆர்.சீனிவாசன், ஆசிரியர் கே.காந்தி, சேலம் ஆர்.கோகுல கண்ணன்,

மாநில தகவல் தொடர்பு செயலாளர் வண்ணை ஜெ. துரைபாபு, பா.நாகராஜன், என்.ரவிச்சந்திரன், எஸ். கோதண்டராமன், யோஷ்வா,

மகளிர் அணி செயலாளராக வி.வெண்ணிலா, துணை செயலாளராக புதுக் கோட்டை வெ.மலர்விழி, மாற்றுத்திறனாளிகளுக்கான மக்கள் தொடர்பு அலுவலராக பா.சக்திவேல், பட்டுக்கோட்டை வீர.சரவணன், பூங்கொடி, இரா. கோவிந்தராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் வேளச்சேரி க.பத்மநாபன், வழக்கறிஞர் ஜான் பாட்ஷா, தமிழ்நாடு மின்சார வாரிய சங்க தலைவர் பி.கோட்டீஸ்வரன், ராணிப்பேட்டை டி. ரேவதி சங்க நிர்வாகிகள் மற்றும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டந்தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்துவது எனவும்,

கழக பொற்கால ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகைகளை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கியதுடன், நலத்திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றி வழங்கி வருவதுடன், மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் மூலம் வழங்கப்படும் பள்ளி முதல் கல்லூரி படிப்பு வரை பல்வேறு கல்வி உதவித் தொகைகளை இரண்டு மடங்கு, மாணவர்களுக்கான விடுதி உணவு கட்டணம் இரண்டு மடங்கு, விபத்து இறப்பு நிவாரணம் இரண்டு மடங்கு (ரூ.2 லட்சம்), விபத்து நிவாரணத் தொகை ரூ.25000/லிருந்து ரூ.50000/ என இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கியதுடன், ஐ.ஐ.டி.யில் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கி தந்த முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீண்டநாள் கோரிக்கையான ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் இலவச ஸ்கூட்டி வழங்கிட அரசாணை வெளியீடு, வீட்டு வசதி வாரியம், நகர்ப்புர மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் வீடுகளில் இட ஒதுக்கீடு செய்ய அரசாணை வெளியீடு, இலவச வீட்டுமனை பட்ட வழங்க அரசாணை, மாற்றுத்திறனாளிகள் எளிய முறையில் அரசு வேலையில் அமர்ந்திட தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் சிறப்பு தேர்வுகள் நடத்திட பல்வேறு அரசாணைகள் வெளியிட்டு நிறைவேற்றி தந்து மாற்றுத்திறனாளிகளின் எண்ணங்களை பூர்த்தி செய்து வரலாற்றில் இடம்பிடித்த முதல்வர், கழகத் தலைவர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் நன்றியினையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மாவட்டந்தோறும், கிராமந்தோறும்,கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் எண்ணற்ற நலத்திட்டங்கள் குறித்து விழிப் புணர்வு கூட்டம் தொடர்ந்து நடத்திடவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அரசு பணிகளில் பணியாற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற தடையாக உள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் துறை (DEPARTMENT EXAM) தேர்வு எழுதுவதிலிருந்து முழு விலக்களித்து உதவிட தமிழ்நாடு அரசை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நெல்லை கிழக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில்

# புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம்!

## தலைமை:இரா.ஆவுடையப்பன்! ஹெலன் டேவிட்சன் - விஜிலா சத்தியானந்த் முன்னிலை!

நெல்லை.ஆக.29-

நெல்லை கிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் வள்ளியூர் எம்.எஸ்.மகாலில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில்

மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாவட்ட அவைத்தலைவர் கிரகாம் பெல்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிகா அருள், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரேமா ஜோசப், மாவட்ட துணை செயலாளர் மாஞ்சோலை மைக்கேல், மாவட்ட மகளிர் அணி தலைவர் கமலா நேரு, மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் ஜெயமாலதி, வள்ளியூர் பேரூர் கழகச் செயலாளர் சேதுராமலிங்கம், மகளிர் தொண்டரணி துணை தலைவர் ஜெனிபர் தினகர், மகளிர் அணி துணைத்தலைவர் சந்திரகலா, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணவேணி, பொன்.இசக்கிஅம்மாள், பரிமளம், ஆயிஷா, பிரேமா எபினேசர், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் சரோஜா முத்துத்துரை, கஸ்தூரி, துணைத் தலைவர் அனுராதா, தாமரைச்செல்வி, வள்ளி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தவசிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தில்லை ராஜா, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சிவா, மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் முருகன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் கோபி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ராஜா, ஆச்சியூர் மணி, சின்னத்துரை ஆகியோர் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மகளிர்கள் அதிக அளவில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

புதிதாக கழகத்தில் இணைந்த உறுப்பினர்களை நெல்லை கிழக்கு

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன்டேவிட்சன் வரவேற்றனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட மகளிர் அணி,மகளிர் தொண்டரணி சார்பில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் வள்ளியூர் எம்.எஸ்.மகாலில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலாசத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிகா அருள், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பிரேமா ஜோசப் உள்பட மகளிர் அணி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கே.வீரராகவராவ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னிலையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கினார். உடன் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் எம்.வி. செந்தில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) /திட்ட இயக்குநர் மதுபாலன், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மு.சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாச்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

## நிலவுப் பரப்பு ஆய்வும், காலை உணவுத் திட்டமும்:

# வரலாற்றுச் சாதனை என்பது என்ன?

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

சென்ற வாரம் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்தன; ஊடகங்களில் கவனம் பெற்றன. ஒரு நிகழ்வு அகில இந்திய ஊடகங்களில் தொடர்ந்து முன்னிலைப்படுத்தப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு இந்தியர்களால் கொண்டாடப்பட்டது; மற்றொரு நிகழ்வு தமிழ்நாட்டு ஊடகங்களில் பகிரப்பட்டது, முற்போக்கு சிந்தனை கொண்டவர்களால் பாராட்டப்பட்டது, அரசியல் நோக்கர்களால் கொண்டாடப்பட்டது.

**முதல் நிகழ்வு சந்திரயான் 3 என்று அழைக்கப்பட்டு நிலவுப் பரப்பை நோக்கி செலுத்தப்பட்ட விண்கலத்திலிருந்து, நிலவுப் பரப்பில் ஆய்வு செய்யும் தானியங்கிக் கலம் நிலவின் பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கிய நிகழ்வு ஆகும்; இரண்டாவது நிகழ்வு, தமிழ்நாட்டின் 37,000 அரசுப் பள்ளிகளிலும் பதினேழு லட்சம் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் திட்டம் மாநிலமெங்கும் தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வு. இரண்டு நிகழ்வுகளுமே வரலாற்றில் இடம் பெறும் முக்கிய நிகழ்வுகள்தாம் என்பதில் ஐயமில்லை. இரண்டுமே பாராட்டுக்கும், பெருமிதத்துக்கும் உரியவைதான்.**

குறிப்பாக சந்திரயான் எனப்படும் வரிசையில் ஒன்று, இரண்டு, மூன்று என வரிசையாக விண்கலங்களை அனுப்பும் திட்டங்களை எல்லாம் தலைமை தாங்கி நடத்துபவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாகவும், எளிய பின்னணியிலிருந்து கல்வியின் மூலம் இந்தப் பதவிகளை அடைந்தவர்களாகவும்



இருப்பது தமிழ்நாட்டு மக்களுக்குப் பெருமிதத்தை வழங்கியுள்ளதையும் காணலாம்.

ஆனால், இந்த இரண்டு நிகழ்வுகளையும், நிலவுப் பரப்பு ஆராய்ச்சி, காலை உணவுத் திட்டம் ஆகிய இரண்டையும் நாம் எப்படிப் புரிந்துகொள்கிறோம், எதற்காகக் கொண்டாடுகிறோம், எத்தகைய வார்த்தைகளால் கொண்டாடுகிறோம் என்பதெல்லாம் முக்கியமானவை. அதைக் குறித்துச் சிந்தித்தால்தான் எது வரலாறு, எது நம்முடைய முக்கியமான சாதனை என்பதைக் குறித்தெல்லாம் தெளிவு பெற இயலும்.

ஒரு வேளை மகாத்மா காந்தி போன்ற ஒரு தலைவர் பிரதமராக இருந்திருந்தால் நலிவுற்ற பிரிவினரின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க காலை உணவு கொடுப்பதை வரலாற்றின் மிகப்பெரிய சாதனை என்று முதன்மைப் படுத்தி கொண்டாடி இருக்கலாம். வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் நேராகச் சென்னைக்கு வந்து அரசுப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுடன் காலை உணவு உண்டிருக்கலாம். பின்னர் பெங்களூரு சென்று இஸ்ரோ அறிவியலாளர்களைச் சந்தித்திருக்கலாம்.

### நிலவுப் பரப்பு ஆராய்ச்சி

நிலவுப் பரப்பு ஆராய்ச்சி என்பது கடந்த அறுபதாண்டுக் காலமாக பல்வேறு நாடுகளும் மேற்கொண்டு வரக்கூடியது. இப்போது நாம் கணினி சார்ந்து தரவுகளையும், காணொலிகளையும், ஒளிப்பதிவுகளையும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் சுலபமாக அனுப்ப இயல்வதால், தானியங்கி விண்கலங்கள் மூலம் விண்வெளி ஆராய்ச்சி கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தியா இத்தகைய தானியங்கி செயற்கைக் கோள்களை அல்லது பயணிகளை நிலவுக்கும், செவ்வாய் கிரகத்துக்கும் அனுப்பும் திட்டங்களைக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. அதற்கு முன்னம் இருந்தே செயற்கைக் கோள்களை பூமியைச் சுற்றிய பாதையில் ஏவுகணைகள் மூலம் நிலைநிறுத்துவதில் கணிசமான திறன் பெற்று, குறைந்த செலவில் அதைச் செய்வதால் பல்வேறு நாடுகளுடனும் வணிக ரீதியான ஒப்பந்தங்கள் மூலம் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது.

இந்த இடத்தில் நாம் அறிவியலுக்கும் தொழில்நுட்பத்துக்கும் உள்ள மெல்லிய இடைவெளியையும் கணக்கில் கொள்ள வேண்டும். அறிவியல் என்பது இயற்கையின் பல்வேறு அம்சங்களைக் குறித்த கோட்பாட்டு அறிவினை உருவாக்குவது. தொடர்ந்த ஆய்வுகள் மூலம் பல்வேறு புதிய கூறுகளை, சாத்தியங்களைக் கண்டறிவது. தொழில்நுட்பம் என்பது கருவிகளை உருவாக்கி இயக்குவது. கருவிகளின் வடிவமைப்பிலும், செயல்திறனிலும் தொடர்ந்து முன்னேற்றம் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். இவை தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதாகவே கரு



தப்படும்.

**சந்திரயான் 3 வெற்றி பெற்றதை நாம் பாராட்டுகிறோம், கொண்டாடுகிறோம் என்றால் அதற்கு முக்கிய காரணம் நாம் உயர் தொழில்நுட்பத்தை, நுண் தொழில்நுட்பத்தைத் திறம்பட கையாள்வதில் நம் திறனை நிரூபி த்துள்ளோம் என்பதாகும். நிலவில் தானியங்கியை தரையிறக்கிய நாலாவது நாடு நாம் என்பது நமக்கு உற்சாகமளிக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் நாமும் இந்த சாதனையை செய்துள்ளோம் என்பதால் மகிழ்கிறோம்.**

### மூட நம்பிக்கையும், தேசிய பெருமிதங்களும்

**ஆனால், சந்திரயான் 3 நிலவில் தரையிறங்கும் அன்று ஊடகங்களில் பரவிய காட்சிகள் பலவும் அதிர்ச்சியளித்தன. நாட்டின் பல பகுதிகளிலும், ஏன் அமெரிக்காவில் கூட, இந்தியர்கள் இந்த முயற்சியின் வெற்றிக்காக யாகங்கள் செய்தார்கள். பூஜைகள் செய்தார்கள், பிரார்த்தனைகள் செய்தார்கள். ஒரு அறிவியல் தொழில்நுட்பச் செயல்பாடு வெற்றி பெற இதுபோன்ற மூட நம்பிக்கை செயல்பாடுகளில் மக்கள் ஈடுபடுவது அறிவியலையே கேலிக் கூத்தாக்குகிறது.**

**அறிவியல் என்பது இறை நம்பிக்கையை மறுக்க வேண்டியதில்லை. அண்டவெளியின் புதிர்கள் எல்லையற்று நீளும்போது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஓர் இயற்கை சக்தி இருக்கிறது, அதுவே மனிதர்களை**




**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*


**யும் இயக்குகிறது என அறிவியலாளர்களும் நினைக்கலாம். பல அறிவியலாளர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்கள்தான். அதில் தவறில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது போல ஒரு மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியை எண்ணுவதிலும், அதை ஏதோ ஒரு வடிவத்தில் வழிபடுவதும் கூட இயல்பானதுதான்.**

ஆனால், தேர்வில் வெற்றி பெற தேங்காய் உடைப்பதாலும், யாகங்கள் செய்து வேண்டுவதாலும் அந்தச் சக்தி நம் செயல்களில் வெற்றி தேடித்தரும் என்று நினைப்பது அப்பட்டமான மூட நம்பிக்கை. இறை நம்பிக்கை வேறு, மூட நம்பிக்கை வேறு. அறிவியல் மனோபாவம் என்பது நமது கட்புலனுக்கு உட்பட்ட இயற்கையை ஆராய்வது. அதற்கும் வெற்றிக்காக தேங்காய் உடைக்கும், யாகம் செய்யும் மனோபாவத்துக்கும் தொடர்பு கிடையாது. வெற்றி பெற்ற பின் நன்றியுணர்வில் காணிக்கை செலுத்துவது கூட இறை வழிபாடு என நினைக்கலாம். ஆனால், என் செயல்களில் வெற்றி கொடு என நெருப்பிலே நெய்யை ஊற்றி யாகம் வளர்ப்பது பண்படாத, முதிர்ச்சியற்ற மானுட செயலாகும். பெரியாரையும், அண்ணாவையும் புரிந்துகொண்டவர்கள் இந்த மூடநம்பிக்கை செயல்களைச் செய்ய மாட்டார்கள். அதுதான் பகுத்தறிவு.

இரண்டாவது கட்டுக்கடங்காத தேசிய பெருமிதம். இந்தியா நிலவை வெற்றிகொண்டு விட்டது, அமெரிக்கா வாயைப் பிளக்கிறது, ரஷ்யா தோற்றோடியது, சீனா பிரமிக்கிறது என்றெல்லாம் கற்பனையை ஓட விட்டு புளங்காகிதம் அடைவது. எப்படி யாகம் செய்வதால் கடவுள் சந்திரயானை செய்து தரவில்லையோ, அதேபோலத்தான் இந்த ஒட்டுமொத்த தேசிய பெருமிதத்துக்கும் அறிவியல் தொழில்நுட்ப முயற்சிகளுக்கும் தொடர்பு கிடையாது.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்கித் தருவதுடன் அரசின் பணி முடிந்துவிட்டது. இந்த இஸ்ரோவை உருவாக்கியது, ஏவுகணைத் தொழில்நுட்பத்தை வளர்த்தது, கணினி தொழில்நுட்பத்தை கால்கொள்ள செய்தது, சந்திரயான், மங்கள்யான் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியது என இந்திய அரசு தொடர்ந்து இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாகத்தான் உள்ளது. அப்படித்தான் இருக்க வேண்டும். அது எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் தவிர்க்கவியலாதது.

**ஆனால், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், மன்மோகன் சிங் ஆட்சியில் இதுபோன்ற முயற்சிகள் வெற்றி பெறும்போது இந்த தேசியப் பெருமிதம் எல்லை மீறிய பிதற்றலாக, கூச்சலாக மாறியதில்லை. இப்போது பா.ஜ.க. ஆட்சியில் எது நடந்தாலும் அதை தேசபக்தி கூச்சலாக மாற்ற அக்கட்சி ஊடகங்களையும், தங்கள் சமூக வலைதள அணிகளையும் தூண்டுகிறது. பிரதமரின் தனிப்பட்ட சாதனையாக இதைக் காட்டவும் தொடர்ந்து முயற்சிகள் நடக்கின்றன. அவரும் மூட நம்பிக்கையாளர்களுக்கு அனுசரணையாக நிலவில் தரையிறங்கிய இடத்துக்கு சிவசக்தி என்று பெயரிடுகிறார்.**

### காலை உணவுத் திட்டம் என்ற புதிய வரலாற்று சகாப்தம்





மாநிலமெங்கும் உள்ள அரசுப் பள்ளிகளில் காலை உணவை வழங்குவது என்பது அரசு ஏதோ நிதி ஒதுக்கும் சங்கதியல்ல. இது போன்ற ஒரு திட்டத்தை செயல்படுத்த மிகப்பெரிய அரசியல் விருப்புறுதி (Political will) தேவை. ஏனென்றால், இது ஒருமுறை நிகழும் காரியமல்ல. இந்தத் திட்டத்தை துவங்கிவிட்டால் அதை நாள்தோறும் தொடர்ந்து நடத்திக் காண்பிக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கானோரின் ஈடுபாடும், உழைப்பும் தேவை.

இந்தத் திட்டத்துக்கும் ஒரு முன் வரலாறு உண்டு. அதை அரசே முன்வந்து சுட்டிக்காட்டுகிறது. நீதிக்கட்சி ஆட்சியிலே சென்னையில் தொடங்கிய மதிய உணவு, கல்விக் கண் தந்த காமராஜர் காலத்தில் செயல்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர் காலத்திலே விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் ஒரு திருப்புமுனை. ஏனெனில் இது அனைத்து அரசுப் பள்ளிகளையும் உள்ளடக்கி, அந்தந்த பள்ளிகளிலேயே சத்துணவு கூடங்களை அமைத்து, பணியாளர்களை நியமித்து உணவு வழங்கியது. அதைத் தொடர்ந்து திராவிட நவயுக சிற்பி கலைஞர் சத்துணவை மேம்படுத்தினார்.

**இந்த முயற்சிகளின் தொடர்ச்சிதான் என்றாலும் முற்றிலும் புதியதொரு சகாப்தம் காலை உணவுத் திட்டம். தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமாக சில குறிப்பிட்ட பகுதிகளில் செயல்படுத்த முயன்ற காலை உணவுத் திட்டத்தை அரசே முன்வந்து அனைத்து அர**



**சுப் பள்ளிகளிலும் வழங்குவது ஒரு துணிகர முன்னெடுப்பு என்றால் மிகையாகாது. முதல்வர் ஸ்டாலினின் அரசியல் விருப்புறுதி இந்தத் திட்டத்தின் அச்சாரமாக விளங்கியுள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி. திராவிட மாடல் தொடர்ந்து இந்தியாவுக்கு வழிகாட்டும் என்பதற்கான சான்று.**

### மனித வளமே மானுட முன்னேற்றம்!

காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாணவர் வருகை கூடியுள்ளது. இடைநிற்றல் என்பது குறையும். கல்வியில் ஆர்வமும், மேம்பாடும் நிகழும். எளிய மக்களுக்குக் கல்வி சென்று சேரும்போதுதான் ஒட்டுமொத்த சமூகத்தின் அறிதல் திறன், சிந்திக்கும் திறன் ஆகியவை மேம்படும். அதுதான் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்கும்.

நிலவின் பரப்பில் நாம் காணக்கூடிய எந்த ஒரு கனிமமோ, பயனுள்ள பொருளோ காலப்போக்கில் மானுடர் வாழ்வை மேம்படுத்த உதவலாம். அது நீண்ட கால சாத்தியம். ஆனால் ஏற்கனவே மானுடம் உருவாக்கியுள்ள வளங்கள் இன்னும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்னும்போது மேலும், மேலும் வளர்ச்சியடைவது என்பதன் பொருள் என்ன?

**இங்கேதான் வரலாறு என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. வரலாறு என்பது யாரோ சிலர் செம்மாந்து வாழ, பலர் தங்கள் உழைப்பையும், வாழ்வையும் செலவிடுவது அல்ல. அது பண்டைய கால அடிமைச் சமூகம். கையிலும் காலிலும் ஆயிரக்கணக்கானோர் விலங்கிடப்பட்டு, உழைத்து ஓய்ந்து மாய வேண்டும், அந்த உழைப்பின் பலன்களை சீமான்கள் சிலர் அனுபவிக்க வேண்டும் என்பது மானுடத்தின் முதிரா பருவம்.**

**அதிலிருந்து விடுதலை பெற்று, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய கோட்பாடுகளை உருவாக்கி, மக்களாட்சி என்பது மக்களே தங்களை ஆண்டுகொள்வது என்று சிந்திக்கும் நிலைக்கு வந்ததைத்தான் நாம் வரலாறு என்கிறோம். அந்த வரலாற்றின் லட்சியம் மானுடத்தின் ஒட்டு மொத்த வளங்களும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு, வளர்ச்சி என்பது அனைவரது வளர்ச்சியாகவும் மாறுவதுதான்.**

இமயத்தில் ஏறி விட்டோம், ஆழ்கடல் பரப்பை அளந்துவிட்டோம், விண்ணிலே பயணம் செய்கிறோம், நிலவுப் பரப்பில் கால்பதித்துவிட்டோம் என்பதெல்லாம் மானுடரின் திறனுக்கு அடையாளமாகலாம். ஆனால், மானுடரின் பண்பாட்டு வளர்ச்சி என்பது அனைத்து மானுடரின் மேம்பாடு என்பதேயாகும். ‘வெள்ளிப் பனி மலையின் மீது உலாவுவோம்’ என்று பாடிய கவிஞன்தான் ‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’ என்றும், ‘தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!’ என்றும் பாடினான். ஒன்றுக்காக மற்றொன்று காத்திருக்க வேண்டும் என்பதில்லை. ஏழ்மை முற்றிலும் நீங்கிய பின்புதான் விண்வெளிக்குப் பயணிக்க வேண்டும் என்று கூறவில்லை.

**ஆனால் நாம் வரலாற்றின் முன்னகர்வு, தேசிய வாழ்வின் முன்னகர்வு, முன்னேற்றம் என்று எதனைக் கொண்டாடுகிறோம், எதனால் சிலிர்ப்படைகிறோம், எதனால் பெருமிதம் கொள்கிறோம் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். நம்முடைய மானுட உணர்வு எத்தகையது என்பதை நாமே புரிந்துகொள்ளும் தருணம் அதுதான்.**

**அந்த வகையில் நான் பெருமிதம் கொண்ட காட்சி நமது முதல்வர் மாணவர்களோடு அமர்ந்து காலை உணவை உண்டு அந்த மகத்தான திட்ட த்தை தொடங்கி வைத்த காட்சிதான். அதுதான் என் கண்களில் நீர்த்திரையிட காரணமானது. அதுதான் நான் தமிழன், இந்தியன் என்று பெருமிதம் கொள்ளச் செய்தது.மானுடனாக மனம் விம்மச் செய்தது.**

நிலவின் பரப்பில் விண்கலம் இறங்கியதில் நான் மகிழ்ந்தேன். அதற்காக நம் அறிவியலாளர்களை மனமார பாராட்டுவேன். ஆனால், இஸ்ரோ அறிவியலாளர், சந்திரயான் 3 திட்ட இயக்குநர், வீரமுத்துவேல் போல ஆயிரம் எதிர்கால சாதனையாளர்கள் இன்று காலை உணவை உண்பதைக் காண்கிறேன். அதுவே வரலாற்றின் மகத்தான அசைவாக என் கண்களுக்குத் தெரிகிறது.

**வெல்க காலை உணவுத் திட்டம்! வெல்க முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசியல் விருப்புறுதி! மக்கி மண்ணாகட்டும் மூட நம்பிக்கை கூடாரங்கள்! வளரட்டும் உண்மை அறிவியல் கண்ணோட்டம்! முன்னேறட்டும் திராவிடம் கழகம் காட்டும் நற்பாதையில்!**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்


29 – 8 – 2023, செவ்வாய்க்கிழமை
ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை தரும்
PRIDE
OF TAMILNADU
HOPE
OF TAMILNADU
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக.. வருக...
மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் / கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
அன்புடன் வரவேற்று மகிழும்...
கோ.ஐயப்பன் M.A., M.L.A.
கடலூர் சட்டமன்ற உறுப்பினர்
Dr.பிரவின் ஐயப்பன் M.S., (Ortho)



கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கரன், கலந்து கொண்டார்கள். மாவட்டக் கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்ட மன்ற உறுப்பினர் கதிரவன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்ட, கழக நிர்வாகிகள் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், கோவிந்தராஜ், துணை மேயர் திவ்யா, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| 29-08-2023 செவ்வாய்க்கிழமை | | |
|---|---|---|
| காலை 10.30 மணி | கமுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

**அன்பகம்,** சென்னை – 18.

நாள் : 25–08–2023.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி

# கழக விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் விவசாய கண்காட்சி - விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!

## மாநில விவசாயத் தொழிலாளர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்! அன்னியூர் சிவா அறிவிப்பு!

சென்னை, ஆக. 29 -

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26. 08.2023 சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் மாநில செயலாளர் அன்னியூர் சிவா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு:

தீர்மானம்1:

திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியில் நித்தமொரு புத்தம் புதிய மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், சுதந்திர திரு நாளை முன்னிட்டு 15.8.2023 சென்னை கோட்டைக் கொத்தளத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகையில், சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கடிய காட்சி ஒன்று ஓலா, ஊபர், ஸ்விஜி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனப் பணியாளர்களின் ஒட்டு மொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கான ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தில் தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" ஒன்று அமைக்கப்படும்.

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என செல்லக்கூடிய வகையில் அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்த சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாக சுழல்வதும், அரசு ஊழியர்களின் கையில் தான் உள்ளது. அந்த கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போது தான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்த திராவிட மாடல் அரசு நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்பும் என ஏழை எளிய மக்களுக்கான - தொழிலாளர் களுக்கான நலத் திட்டங்களை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம் 2:

கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியையும் இணைத்து "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" நடத்திட உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள், 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரையென அனைத்து இடங்களிலும் எழுச்சியுடனும், சிறப்புடனும் கொண்டாடிட வேண்டும் என்றும், நூற்றாண்டு கொண்டாட்டத்தில் திமுக விவசாயத் தொழிலாளர் அணியையும் இணைத்து "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" தமிழகம் முழுவதும் நடத்திட வேண்டுமென உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு, திமுக விவசாயத் தொழிலாளர் அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 3

விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" சிறப்பாக கொண்டாடிடுவோம்.

விவசாயத் தொழிலாளர் அணியின் சார்பாக அனைத்து கழக ஒன்றியத்திலும் நவீன தொழில்நுட்பங்கள். விவசாய திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வங்கியின் பயிர் கடன்கள் குறித்த விழிப்புணர்வு முகாம். வேளாண்மை அதிகாரிகளை கொண்டு நடத்த வேண்டும்.

விழிப்புணர்வு முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஒலி பெருக்கி அறிவிப்பு, செய்திதாள் விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாக செய்ய வேண்டும்.

முகாம்களில் பங்குபெறும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகள் மற்றும் விதைப்பந்து பைகளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த தொலைநோக்கு திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கிட வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் என பல்வேறு விவசாய முறைகள் அதன் மூலம் மகசூல் குறிந்த மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் விவசாயத்திற்காக முன்னோடி திட்டங்கள் பற்றிய விளக்கங்களின் தொகுப்புகள் அடங்கிய விவசாய கண்காட்சி நிகழ்ச்சி செப்டம்பர் மாதத்தில் நடத்த வேண்டும்.

கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நடைபெறும் நாட்கள் குறித்த பட்டியலை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்திற்குள் கண்காட்சியின் விவரத்தை அணிச் செயலாளரிடம் தெரிவிக்க வேண்டும் .

அனைத்து உழவர் சந்தைகளிலும் தேவைப்படும் கூடுதல் வசதிகளை விவசாயத் தொழிலாளர் அணியின் சார்பாக செய்துதரும் வகையில் முக்கிய கழக நிர்வாகிகளைக் கொண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.

விவசாயிகளுக்காக 'நான் விவசாயி ' என்ற செயலியை உருவாக்கி அதில் விவசாய திட்டங்கள் காலநிலை குறித்த அறிவிப்புகள் மற்றும் சந்தைகளின் விலை நிலவரங்கள் குறித்த அறிவிப்புகள் ஆகியவை இடம் பெறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இந்த செயலியானது முதலமைச்சர் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலமாக துவக்கி வைக்கப்பட வேண்டும்.

என தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர்அவர்கள் "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை" விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் தமிழகம் முழுவதும் கொண்டாட வேண்டுமென உத்தரவிட்டதற்கிணங்க தத்தமது மாவட்ட செயலாளர்களின் ஆலோசனை பெற்று தலைமைக் கழகத்தால் மேலே குறிப்பிட்டபடி கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டுமென தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மதுரை மாநகராட்சியில் 4கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1வது மண்டல அலுவலகத்திற்கான புதிய கட்டிடத்திற்கான கட்டுமானப் பணியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்த போது எடுத்த படம். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், துணை மேயர் நாகராஜன், மண்டலத்தலைவர் வாசுகி சசிக்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் ரோகினி பொம்மதேவன், ஜெயராஜ், பாபு, செங்கிஸ்கான், கழக நிர்வாகிகள் பெ.சசிக்குமார், பெ.பூமிநாதன், மருதுபாண்டியன், கவுரிசங்கர் மற்றும் கழகத்தினர், அதிகாரிகள் உடன் உள்ளனர்.

# ஊழலின் மொத்த உருவம் பி.ஜே.பி. ஆட்சி!

இந்தியாவில் பி.ஜே.பி அரசு தவறே செய்யாமல் தூய்மையாக நடப்பது போலும் நேர்மையாக நடப்பது போலவும் ஒரு மாயத் தோற்றத்தை பிரதமர் மோடி அவர்களும் மற்ற அமைச்சர்களும் பாவலா காட்டி நடகமாடி வந்தார்கள்

ஒன்றிய அரசிலும் மாநில அரசிலும் அரசு செயல்படுத்துகிற பணிகள், ஒதுக்குகிற நிதிகள் செயல்படுத்துகிற திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குகிற நிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா இல்லையா; அதிகப்படியான நிதியை ஒதுக்கி மோசடிகள் நடக்கிறதா என முழு ஆய்வு செய்து தணிக்கை செய்து அந்தந்த துறையின் மூத்த அதிகாரிகள் துறை சம்பந்தமாக கொடுக்கிற கோப்புகளில் இருந்து தலைமை தணிக்கை அதிகாரிகள் தணிக்கை செய்து அறிக்கையை மாநில அரசாக இருந்தால் சட்டமன்றத்திலும் ஒன்றிய அரசாக இருந்தால் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிப்பார்கள்

இந்த நிலைப்பாட்டில் ஒன்றிய பி.ஜே.பி. அரசு ஏராளமான துறைகளில் நிதி ஒதுக்கீட்டில் மோசடிகள் நடந்திருப்பதாக விவரங்களை வெளியிட்டுள்ளது. அதில் ஒன்றிய அரசு இந்திய நாட்டினுடைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கனவு திட்டங்களில் ஒன்றாகவும் அவரது நேரடி கண்காணிப்பில் உள்ள திட்டமாகவும் கருதப்பட்ட பாரத் மாலா பரி யோஜனா திட்டத்தில் தான் அதிகமான முறைகேடுகள் நடந்திருக்கின்றன.

இதில் ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு பிரதமர் அவர்கள் தலைமையில் கூடி நிதி ஒதுக்கீடு செய்கிறது முதல் முறையாக நாடுமுழுவதும் உள்ள 74 ஆயிரத்து 942 கிலோ மீட்டர் நீளத்திற்கான தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதாக கூறி 2017 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்தது முதல் கட்டமாக இந்த திட்டத்திற்கு 5,35,000 கோடி ரூபாயை பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு ஒதுக்கீடு செய்தது

இந்த தொகைக்குள் 34,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்தி இருக்க வேண்டும். ஆனால் 26 ஆயிரத்து 316 கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளை விரிவு படுத்துவதற்கு 8 லட்சத்து 46 ஆயிரத்து 588 கோடி ரூபாய் அரசு பணம் செலவழிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத் துறை கணக்கு காட்டி உள்ளது

ஒன்றியஅரசு இந்த அளவுக்கு அரசு பணம் ஒதுக்கப்பட்டும் கடந்த 2023 மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை 13,499 கிலோ மீட்டர் அளவிற்கே தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன

2017 முதல் 2023வரை ஐந்தாண்டுகள் முழுமையாக நிறைவடைந்தும் 74 ஆயிரத்து 942 கிலோ மீட்டர் நீளத்திற்கான பணி செய்வதற்கு முடிவெடுத்து அதில் 13 ஆயிரத்து 499 கி.மீ தூரம் சாலைப் பணி நடந்து உள்ளது. 6 ல் ஒரு பாகப்பணி தான் நடந்திருக்கிறது மீதமுள்ள பணிகள் எப்பொழுது முடிப்பது? அரசு பொருளாதார விவகாரங்க ளுக்கான அமைச்சரவை குழு 15 கோடியே 37 லட்சம் ரூபாய் ஒரு கிலோ மீட்டருக்கு என்று நிதி ஒதுக்கப்பட்டு அதில் இப்பொழுது செலவு செய்யப்பட்டிருப்பது ஒரு கிலோ மீட்டருக்கு 32 கோடி ரூபாய் நூறு சதவீதம் அதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒன்றிய அரசு அந்த பொருளாதார குழு பிரதமர் அவர்கள் தலைமையில் நடக்கும் அந்த குழு ஒப்புதல் கொடுத்தது. பணிகள் நடந்து இருக்கிறதா இல்லையா, ஏன் இந்த பணிகள் முறையாக நடக்கவில்லை என்று ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் இந்த பொருளாதார குழு கூடுகின்ற பொழுது அல்லது பிரதமர் அவர்கள் நெடுஞ்சாலை துறையினுடைய அமைச்சரை உயர் அதிகாரிகளை அழைத்து எதற்காக இவ்வளவு காலதாமதம் என்று கேட்டு அதிக நிதி ஒதுக்கியதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடித்து இந்தக் குற்றச்சாட்டைத் தடுத்திருக்க வேண்டும்.



**கோவை கே.செல்வராஜ்**
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

டெல்லியில் ஹரியானா மாநிலம் குர்காம் செல்லும் துவாரகா எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை எட்டு வழிச்சாலையாக அமைப்பதில் தான் உச்சகட்டமாக ஊழல் நடந்துள்ளது இந்த நெடுஞ்சாலைக்கான ஒரு கிலோமீட்டர் 18 கோடியே 20 லட்சம் ரூபாய் தான் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு ஒதுக்கீடு செய்தது

ஆனால் அதைவிட 14 மடங்கு அதிகமாக ஒரு கிலோமீட்டருக்கு 251 கோடி ரூபாய் வரை செலவானதாக கணக்கு காட்டி ஒப்பந்ததாரர்களுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாரி வழங்கி உள்ளது. இதில் 29 கிலோமீட்டர் சாலை அமைப்பதில் 6758 கோடி ரூபாய் அதிகமாக அரசு திட்டத்திற்குரிய நிதியை விட அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது. இது எந்த அடிப்படையில் யாருடைய அனுமதி. பெற்றுக்கொடுக்கப்பட்டது எதற்காக கொடுக்கப்பட்டது அந்த டெண்டர் தொகை அதிகமாகக் கொடுக்கின்ற அதிகாரம். யாருக்கும் இல்லை.

ஒன்று அந்த டெண்டரை ரத்துசெய்து தள்ளுபடி செய்து விட்டு புதிய டெண்டரை அறிவித்து புது ஒப்பந்ததாரருக்கு தான் பணியை கொடுக்க முடியும். அந்தப் பணி நிறைவுபெறுவதற்கு முன்பாக ஒவ்வொரு பாகமாக பணம் கொடுப்பார்கள்

ஆனால் இந்த ஒரு சாலைக்கு மட்டும் இவ்வளவு பணம் எந்த அடிப்படையில் எந்த ஒரு முகாந்திரத்தில் கொடுக்கப்பட்டதோ அதற்கு அந்த துறையின் அமைச்சர் உட்பட எல்லோரும் பொறுப்பாவார்கள். அந்த நெடுஞ்சாலைத்துறை ஆணைய அதிகாரிகள் உட்பட எல்லோரும் பதில் சொல்லி ஆக வேண்டும் பிரதமர் அவர்கள் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து இந்த துறையில் நடந்துள்ள இந்தத் தவறுகள் மோசடிகள் பணப்பரிமாற்றங்களை கண்டுபிடித்து நாட்டு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

இதில் முழுமையாக உண்மை வர வேண்டுமென்றால் சி.பி.ஐ. அல்லது அமலாக்கத் துறை இந்த வழக்கை விசாரித்து உண்மை நிலையை விரைவில் 3மாத காலத்திற்குள் வெளிப்படுத்த வேண்டும். சி.ஏ.ஜி. அறிக்கை கொடுத்து 20 நாட்களுக்கு மேல் ஆகிறது. எந்த பதிலும் சொல்லாமல் ஒன்றிய அரசு இருப்பதற்கு என்ன காரணம் என்பதனை மக்களுக்குத் தெளிவாக ஒன்றிய அரசு சொல்ல வேண்டும்.

ஒப்பந்ததாரர்களுக்கு தேசிய நெடுஞ்சாலை பணிகளை வழங்கியதில் பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ள தாக சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது

பதிவு செய்யப்படாத ஒப்பந்ததாரர்கள் கூட விதிகளை மீறி ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. கூறுகிறது அரசு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான விதிகளை ஒன்றிய அரசு பெருமளவு மீறி உள்ளதாகவும் சி.ஏ.ஜி. குற்றம் சாட்டியுள்ளது

அரசின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவர்களுக்கு போலியான சான்றிதழ்களை வழங்கியவர்களுக்கும் ஒப்பந்தங்கள் கொடுத்தும் மெகா டெண்டர் பணியில் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருப்பதாக சி.ஏ.ஜி. கூறுகிறது.

இதே போல தென் மாநிலங்களில் உள்ள ஐந்து சுங்க சாவடிகளை மட்டும் சி.ஏ.ஜி. ஆய்வு செய்த பொழுது அதில் மட்டுமே விதிகளை மீறி பொதுமக்களிடம் ரூ.132 கோடி சுங்க கட்டணமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு வசூலித்துள்ளதாக சுட்டிக்காட்டி உள்ளது

இந்த ஐந்து சுங்கச் சாவடிகளிலேயே இவ்வளவு முறைகேடுகள் என்றால் நாடு முழுவதும் உள்ள சுங்கச் சாவடிகளில் மக்கள் பணம் எந்த அளவுக்கு தவறாக வசூலிக்கப்பட்டு இருக்கும்? அதாவது சுங்கச் சாவடிகளில் ஆண் பெண் கழிப்பறை வசதி, வாகனங்களை இரண்டு நிமிடங்களுக்கு மேல் வந்து நிற்காமல் செல்வதற்கு ஊழியர்கள் செயல்பட வேண்டியது.

சாலைகளை அகலப்படுத்தி வாகனங்கள் வேகமாக செல்வதற்கு ஏற்ப அமைக்க வேண்டும். இப்பொழுது இருக்கிற எந்த சுங்கச் சாவடிகளும் சுத்தம் கிடையாது சுகாதாரமும் கிடையாது, வசதி கிடையாது குடிப்பதற்கான குடிநீர் கிடையாது, இப்படிப்பட்ட நிலையில் நீதிமன்றங்களே எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுத்தால் தான் பணம் வசூலிக்க வேண்டும் என்று பலமுறை தீர்ப்பு கூறியுள்ளது, ஆனால் இந்த சுங்க சாவடிகள். எந்த அடிப்படை உரிமைகளையும் செய்வதில்லை

இதை நெடுஞ்சாலைத் துறையின் உயர் அதிகாரிகள் கண்டு கொள்வதுமில்லை. அந்த ரூ.132 கோடி எந்தெந்த வாகன எண்களில் வசூலிக்கப்பட்டதோ அவர்களுக்கு ஒன்றிய அரசு திருப்பிக் கொடுக்குமா என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

ஆயுஷ் மான் பாரத் திட்டத்தில் ஊழல் 2018 செப்டம்பர் முதல் 2021 மார்ச் வரையில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்ட விதம் குறித்தும் முழுமையாக ஆய்வு செய்தும் தணிக்கை செய்தும் சி.ஏ.ஜி. அங்கு நடந்த முறைகேடுகள் மோசடிகள் தவறுகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளது

மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு அறுவைசிகிச்சை நிகழ்ந்ததாக கூறப்பட்ட இரண்டு லட்சத்து 25 ஆயிரம் நபர்களுக்கு காப்பீட்டுப் பணம் வழங்கப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்ன என்றால் வீட்டுக்குச் சென்ற பிறகு எப்படி அறுவைச் சிகிச்சை செய்திருக்க முடியும்' அப்பட்டமான ஒரு பகிரங்கமாக இரண்டு லட்சத்து 25 ஆயிரம் பேர்களுக்கு போலியான கணக்கு காட்டியதில் பணம் வழங்கப்பட்டுள்ளதாக கூறியிருக்கிறார்களே, இதற்கு ஒன்றிய அரசு உடனடியாக மக்களுக்கு பதில் சொல்லி ஆக வேண்டும்

பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்கு கூட இந்தத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என கணக்கு காட்டப்பட்டுள்ளது

45 ஆயிரத்து 846 கிளைம்களில் மருத்துவமனையில் சேர்ந்த தேதிக்கு முந்தைய நாட்களில் டிஸ்சார்ஜ் தேதி இருக்கிறது. மருத்துவமனையில் நோய்வாய் பட்டவர்கள் அனுமதிக்கப் பட்டார்கள் என்றால் அவர்கள் எப்படி மருத்துவமனைக்கு வரும் நாட்களுக்கு முன்பே வீட்டுக்கு அனுப்ப முடியும்?

ஒரே நபர் ஒரே நேரத்தில் பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதாக கணக்கு காட்டப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ளப்படாமல் அரசு பணம் விநியோகிக்கப்பட்டுள்ளது என்கிற இந்த தவறை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இறந்து போன 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 பேர்களுக்கு புதிதாக சிகிச்சை அளிக்கப்படுவதாக கணக்கு காட்டப்பட்டு பணம் எடுக்கப்பட்டு மிகப்பெரிய ஊழல் மோசடி நடந்துள்ளது.

பயனாளிகளின் 7 லட்சத்து 50 ஆயிரம் பேரின் விண்ணப்பங்களில் 9999999999 என்கிற தொலைபேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 40 ஆயிரம் பயனாளிகளின் விண்ணப்பங்களில் 8888888888 என்கிற செல்போன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற காலத்தில் 4761 பதிவுகள் 7 ஆதார் எண்களை மட்டுமே பயன்படுத்தி எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசும் ஒன்றிய பா.ஜ.க. அரசு இணைந்து ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் கூட்டு மோசடி ஊழல் நடந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை உள்ளது

இந்த பல லட்சம் கோடி ரூபாய் ஊழல் மோசடிகளை செய்தது யார் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் என நிதி அமைச்சகம் இந்தத் துறையில் முழுமையாக செயல்பட்ட அனைத்து அதிகாரிகளும் அந்தத் துறை அமைச்சரும் மக்களுக்கு தெளிவாக பதில் சொல்ல வேண்டும்.

**மாற்றுத்திறனாளிகள் நிதியில் முறைகேடு**

தேசிய சமூக உதவி திட்டத்தின் கீழ் வயதான முதியவர்கள் விதவைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நிதியை பிரதமர் மோடியை முன்னிலைப்படுத்தும் வகையில் தூய்மை இந்தியா திட்டத்திற்கான விளம்பர பலகைகள் அமைப்பதற்கு இந்த ஓய்வூதியத் திட்ட பணம் செலவிடப்பட்டுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு விளம்பரப்படுத்துவதற்காக ஏழை மக்களின் ஓய்வூதிய திட்ட பணத்தை சுமார் ரூ.75 கோடி வரை அத்துமீறி செலவு செய்தது சி.ஏ.ஜி. அருகில் கூறியுள்ளது.

எச்.ஏ.எல் நிறுவனத்தின் இந்திய அரசுக்கு சொந்தமான விமான நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக் லிமிடெட்டில் விமான என்ஜின்களை வடிவமைப்பதில் காட்டப்பட்ட அலட்சியம் காரணமாகவும் நிபுணர் களின் பரிந்துரைகளை ஏற்காமல் செயல்பட்டதாலும் 159 கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு இழப்பு. ஏற்பட்டுள் ளது என சி.ஏ.ஜி. ஆய்வில் தணிக்கையில் கூறியுள்ளது. தவறாக செலவு செய்தவர்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ராமர் கோவில் நிலம், அயோத்தி மேம்பாட்டு திட்ட நிலம் மலிவு விலையில் வாங்கப்பட்டு பின்னர் ராமர் கோவில் அறக்கட்டளைக்கு அதிக விலைக்கு விற்கப்பட்டதை சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி இருக்கிறது இதன் மூலம் ஆய்வு மேம்பாட்டு திட்டத்தில் நிகழ்ந்த மோசடி நிதி ஊழல் சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டியுள்ளது.

2013இல் நடக்காத குற்றத்தை நடந்ததாக 2 ஜி யில் பல கோடிகள் என்று பகிரங்கமாக தவறான கருத்துக்களை பி.ஜே.பி. பரப்பி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சிக்கு வந்த பி.ஜே.பி. 2013இல் ஒன்றிய அரசின் இதே சி.ஏ.ஜி. கூறியது... கூடுதல் விலைக்கு 2ஜி அலைக்கற்றை விட்டிருந்தால் அரசுக்கு இவ்வளவு வருவாய் வந்திருக்கும் என உத்தேசமாக குறிப்பிட்டு சி.ஏ.ஜி. அறிக்கையில் கூறியிருந்தது. அதை பி.ஜே.பி. தவறாக பொய் பிரச்சாரத்தை செய்தது 2ஜி அலைக்கற்றை ஏலத்தில் எந்த முறைகேடும் நிகழவில்லை முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா குற்றமற்றவர் என டெல்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றமே தீர்ப்பளித்தது.

இப்பொழுது பி.ஜே.பி. அரசு 5ஜி அலைக்கற்றை ஏலம் விட்ட போது ஐந்து லட்சம் கோடி ரூபாய் வரை இதன் மூலம் ஒன்றிய அரசுக்கு வருவாய் வரும் என்று கூறிவந்தது. ஆனால் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் தான் வருவாய் வந்துள்ளது. மீதமுள்ள 3.5 லட்சம் கோடி ரூபாய் எங்கே சென்றது என்ன நடந்தது என்பதை ஒன்றிய அரசு தகவல் தொடர்புத்துறை தெளிவாக விளக்க வேண்டும்.

பல லட்சம் கோடி ரூபாய் மக்களின் வரிப்பணம் ஏழை எளியவர்களின் வரிப்பணம் கஷ்டப்பட்டு தொழில் புரியும் சிறு குறு தொழிலதிபர்களின் ஜி.எஸ்.டி. வரி பணம் தமிழகத்தில் இருந்து மட்டும் ஒரு லட்சம் கோடிக்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் வருமான வரியாக செலுத்துகிறோமே; அந்த பணம் மக்கள் பணம். ஆனால் நடந்துள்ள மோசடிகள் ஊழல்களை அரசின் தலைமை தணிக்கை கணக்காளர் கொடுத்துள்ள இந்த அறிக்கையில் நடந்துள்ள தவறுகளை பகிரங்கமாக பி.ஜே.பி. அரசு ஏற்றுக்கொண்டு ராஜினாமா செய்ய வேண்டும்.

பிரதமர் சுதந்திர தின உரையில் 'ஊழலே இருக்கக் கூடாது' என்று சூளுரைத்தாரே; இந்த ஊழலில் ஈடுபட்டுள்ள அமைச்சர்கள் மீது எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்? அதிகாரிகள் மீது எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

முழுமையாக நடந்தவற்றைக் கண்டுபிடித்து மக்களுக்கு உண்மை நிலையை பி.ஜே.பி. ஒன்றிய அரசும் .பிரதமரும் தெரிவிக்க வேண்டும்.

இந்தக் குற்றத்திற்கு தார்மீகப் பொறுப்பேற்று பி.ஜே.பி. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.8.2023) முகாம் அலுவலகத்தில், ஹஜ் புனித பயணம் செல்வதையொட்டி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தனது மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# திருவாரூரில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி!

## பொதுமக்களைச் சந்தித்து புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்!

திருவாரூர், ஆக. 29 –

திருவாரூர் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்குள்ள தெருக்களில் நடைபயிற்சி மேற்கொண்டு, பொதுமக்களுடன் உரையாடி, புகைப் படங்கள் எடுத்துக் கொண்டார்.

கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 4 நாள் பயணமாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அதன்படி, நாகை மாவட்டம் சென்ற அவர், திருக்குவளையில் உள்ள அரசுப் பள்ளியில் குழந்தைகளுக்கான காலை சிற்றுண்டி திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவர்களுடன் சேர்ந்து உணவு அருந்தினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்ட ஆட்சியர்களுடன் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து திருவாரூருக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சன்னதி தெருவில் உள்ள அவரது இல்லத்தில் தங்கினார்.

பின்னர், திருவாரூர் அருகே பவத்தர மாணிக்கத்தில் நடைபெறும் கம்யூனிஸ்ட் எம்.பி., செல்வராஜின் மகள் திருமணத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை திருவாரூர் தெருக்களில் அவர் நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது பொதுமக்களுடன் உரையாடி, புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு மகிழ்ந்தார்.

# ‘இந்தியா’ கூட்டணியில் மேலும் சில கட்சிகள் சேரும்!

## பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தகவல்!



பாட்னா, ஆக. 29 -

எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய இருப்பதாக பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடக்க உள்ள மக்களவை தேர்தலில் பா.ஜ.வை எதிர்த்து போட்டியிட காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட 26 கட்சிகள் ஓரணியில் இணைந்துள்ளன. இக்கூட்டணிக்கு ‘இந்தியா’ என பெயரிடப்பட்டுள்ளது. இதன் ஆலோசனைக் கூட்டம் பாட்னாவிலும், பெங்களூருவிலும் நடந்துள்ளது.

இதைத் தொடர்ந்து 3வது ஆலோசனைக் கூட்டம் மும்பையில் வரும் 31 மற்றும் செப்டம்பர் 1ம் தேதி நடக்க உள்ளது.

இதுகுறித்து பாட்னாவில் பேட்டி அளித்த பீகார் முதல்வர் நிதிஷ் குமார், “மும்பையில் நடக்கும் ஆலோசனைக் கூட்டத்தில், மக்களவை தேர்தலுக்கான உத்திகள் குறித்து விவாதிப்போம்.

மேலும், தொகுதி பங்கீடு தொடர்பான விஷயங்களை இறுதி செய்வது குறித்தும் விவாதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எங்களின் இந்தியா கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இணைய உள்ளன. 2024 மக்களவை தேர்தலுக்கு முன்பாக அதிகபட்ச கட்சிகளை ஒன்றிணைக்க விரும்புகிறேன். அந்த திசையிலேயே நான் செயல்படுகிறேன். மற்றபடி எந்த பதவி மீதும் எனக்கு ஆசை இல்லை” என்றார்.

இதற்கிடையே, நாக்பூரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் அலோக் சர்மா, பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த நான்கைந்து கட்சிகள் ‘இந்தியா’ கூட்டணியில் சேரும் என்று தெரிவித்தார்.

### அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான

# தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு!

சென்னை, ஆக. 29-

அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான தமிழ்நாடு அரசின் அரசாணைக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் ஆகமம் சம்பந்தப்பட்ட பணியாளர்களை நியமிக்க தடை விதிக்கக் கோரி ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச்சங்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு இந்து சமய நிறுவன ஊழியர்களுக்கான சேவை விதிகள், 2020ன் கீழ் கடந்த 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட்ட அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டது. அந்த மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து ஆதி சைவ சிவாச்சாரியார்கள் நலச் சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு, நீதிபதிகள் எம்.சுந்தரேஷ், ஜெ.பி.பர்திவாலா அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என கோரப்பட்டது.

ஆனால், இதனை ஏற்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர். மேலும், இந்த மனு தொடர்பாக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை பதில் மனு தாக்கல் செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### கழுதூரில் – கடலூர் மாவட்டக் கழக

# இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், ஆக. 29-

கழுதூரில் இன்று (29.08.2023 - செவ்வாய்க் கிழமை) காலை 9.00 மணி அளவில் நடைபெறும் கடலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

இக்கூட்டத்தில் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கழுதூரில் இன்று (29.08.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணி அளவில் நடைபெறும் கடலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

இக்கூட்டத்தில் கழக இளைஞரணி நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞரணியினரும் வெண் சீருடையில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை! பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில்

# தளபதி மு.க.ஸ்டாலினின் ‘உங்களில் ஒருவன்’ நூல் கருத்தரங்கம்!

## தஞ்சை கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார்!

சென்னை, ஆக. 29-

தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘உங்களில் ஒருவன்’ நூல் குறித்து தஞ்சை, கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார். முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை நிகழ்த்து கிறார்.

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி. ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சுழலுகின்ற பூமிப்பந்தில் சுடர்விட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறையான திராவிடர் கழகத்தின் துணை அமைப்புகளில் ஒன்றான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், 31.8.2023, வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலில் அமைந்துள்ள அன்னை திருமதி ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அதில் தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன், தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய “உங்களில் ஒருவன்” எனும் நூல் குறித்து ஒன்பதாவது தொடர்சொற்பொழிவை ஆற்றுகிறார். தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் முனைவர் நா.சந்திரபாபு தொடக்க உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வுக்கு பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென். மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அனைவரும் வரவேண்டுமென வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



# கலைஞரும் வரலாறும்!

வரலாற்றை எழுதுவது எளிதல்ல, அதிலும் குறிப்பாக இளையோர் அறிந்துகொள்ளும் வகையில் எளிமையாகக் கொடுப்பது வரலாற்றை எழுதும் எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை. ஆனால், வரலாற்றை இளையோருக்கு எளிமையாகச் சொன்னதில் கலைஞரைப் போல ஆளுமை கொண்டவர்கள் எவருமில்லை.

இந்திய அளவில் வரலாற்றை எழுதுவதில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் என்றால், பண்டித ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர் ஆகியோரைக் குறிப்பிடலாம். எழுதி வைக்கப்பட்ட வரலாற்றை உடைத்து, அது யாருக்கானது என விளங்கிக் கொள்ள வைத்தவர் பெரியார். திராவிட இயக்கத்தின் வாரிசுகளாக எளியோருக்கான வரலாற்றை உருவாக்கியவர்கள் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும். பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர், வரலாற்றை இனத்துக்குக் கடத்தும் பெரும் பொறுப்பையும் வகித்தவர் கலைஞர். வரலாற்றை உருவாக்குவது, வரலாற்றை எழுதுவது என இரண்டு வகைகளிலும் கலைஞரின் எழுத்துகளைக் காணலாம்.

மனங்களில் ஏற்படும் மாற்றங்கள்தான், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் புதிய கோணங்களை ஏற்படுத்தும் என்றவர் கலைஞர். அதற்கான பணிகளை தனது எழுத்தின் மூலமும் முழு வீச்சாகச் செய்தவர் அவர்.



### கலைஞரின் கடிதங்கள்

நாளைய அரசியலுக்கு நேற்றைய வரலாறு முக்கியம். கழக இளையோருக்கு அதை வாசிக்கக் கொடுத்தவர் கலைஞர். அவரது கட்டுரைகள் பலவற்றில் அவற்றை காணலாம். குறிப்பாக கலைஞர் கடிதங்கள் சமகால வரலாற்றையும், கடந்த கால வரலாற்றையும் கடத்தின. அவரது கடிதங்களில் இளையோருக்கு அளித்த முக்கியத்துவத்தினை 2007-ஆம் ஆண்டு எழுதிய கடிதங்களை முத்தாய்ப்பாகச் சொல்லலாம்.

2007-ஆம் ஆண்டில் தி.மு.க இளைஞரணி மாநில மாநாடு முதல்முறையாக நெல்லையில் நடக்கிறது. இளைஞரணிச் செயலாளராக தற்போதைய முதலமைச்சர் மாநாட்டுப் பணிகளைக் கவனித்து வருகிறார். ஆனால், தனது பங்களிப்பாக **'இளைஞர்களுக்கு வழி விடுவோம்'** என தொடர்ந்து ஒவ்வொரு நாளுமாக 25 கடிதங்களை எழுதினார் கலைஞர்.

அந்தக் கடிதங்கள் அனைத்திலும் இளைய சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டிய வரலாறுகள், உலகை மாற்றிய போக்குகள், புரட்சியாளர்கள் குறித்து எளிமையாக அறிமுகம் செய்கிறார். **நீதிக்கட்சி வரலாறு, மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனில், பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா, நெல்சன் மண்டேலா, சாக்ரடீஸ், மாசேதுங், வால்டேர், ரூசோ, ஆபிரகாம் லிங்கன், பகத்சிங்** என உலகத் தலைவர்களை அறிமுகம் செய்கிறார்.

தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாறு, இந்திய சுதந்திரப் போராட்டம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆற்றிய பணிகளை, அந்த வரலாற்றின் சொந்தக்காரர்கள் நாம் என்கிற உணர்வை ஊட்டும் விதமாக அவரது எழுத்துகள் இருந்தன.

### இன மொழி உணர்வு

ஜவகர்லால் நேரு சிறையில் இருந்து, இந்திராகாந்திக்கு எழுதியவை எல்லாம், உலக வரலாற்றை அறிய தரும் ஒரு வழிப் பாதையாக மட்டுமே இருந்தன. ஆனால் கலைஞரோ இன, மொழி உணர்வு அதற்கான போராட்டங்கள் ஆகியவற்றை தனது எழுத்துகள் மூலம் கடத்தினார்.

எல்லாவற்றையும் மீள்பார்வையாக உடன்பிறப்புகளுக்குக் கொண்டு வந்தார். தனது வாழ்க்கையை வரலாறாகப் பதிவு செய்ததிலும் கலைஞரைப் போல உழைத்தவர்கள் யாருமில்லை. தனது வாழ்க்கை வரலாறாக அவர் படைத்துள்ள **'நெஞ்சுக்கு நீதி'** நூல்கள் தமிழ்நாட்டின் ஒரு நூற்றாண்டு சித்திரம்.

**'நெஞ்சுக்கு நீதி'**யின் முதல் பாகத்தில் முதல் அத்தியாயத்திலே, தான் பிறந்த ஆண்டு குறித்துக் கூறும் போது அந்த ஆண்டில் தேசிய, சர்வதேச அளவில், வேறு என்ன நிகழ்வுகள் எல்லாம் நடந்தன என்பது பற்றிக் கூறி, 'இப்படி ஒரு காலப் பின்னணியில்தான் நான் பிறந்தேன்' என்கிற ரீதியில் எழுதியிருப்பார். தன்னுடைய பிறப்பையே ஒரு வரலாற்று நிகழ்வுக்குரிய முக்கியத்துவத்துடன் விளக்கிச் சொல்லியிருப்பது வரலாற்றின் மீது அவருக்கு இருந்த ஆர்வத்தையே காட்டுகிறது.

### பயணமும் பதிவும்

ஒரு பக்கம் **'சங்கத் தமிழ்'** என்று இலக்கியங்களில் உள்ள பண்டைய தமிழ்நாட்டின் வரலாற்றைச் சொல்ல, இன்னொரு பக்கம் **'ரோமாபுரி பாண்டியன்', 'தாய்க் காவியம்'** என சர்வதேச வரலாறுகளையும் தனது தெள்ளு தமிழில் அறிமுகப்படுத்தினார் கலைஞர். எழுத்தில் மட்டுமல்ல. தன்னுடைய உரைகளின் போது **'சேரன் செங்குட்டுவன், கனக விசயன்'** ஆகியோரைப் பற்றித் திரும்பத் திரும்ப மக்களிடையே பேசி மறைந்திருந்த மூவேந்தர்களின் சிறப்புகளை மீட்டெடுத்தபடியே இருந்தார்.

புனைவு வழியாக மட்டுமல்லாமல் 1970-களில் தான் மேற்கொண்ட அரசு முறை வெளிநாட்டுப் பயணங்களை 'இனியவை இருபது' என்ற தலைப்பில் இருபது வாரங்களுக்கு **'தமிழரசு'** இதழில் தொடராக எழுதினார். சுவிட்சர்லாந்து, ரோம் என அவர் சென்ற நாடுகளைப் பற்றி எழுதும்போது, அந்த நாடுகளின் வரலாறு, அவை சந்தித்த யுத்தங்கள், பொருளாதார முன்னேற்றம் என பல விஷயங்களைப் பற்றி கலைஞர் சொல்லியிருக்கிறார்.

இவையெல்லாம் கடந்த கால வரலாறு. ஆனால் கழகத்தின் நிகழ்கால வரலாறு என்று ஒன்று உண்டு. 50 பகுதிகளாக வந்துள்ள **'கலைஞர் கடிதங்கள்'** புத்தகங்களைப் படிக்காமல் கழகத்தின் நிகழ்கால வரலாற்றை அறிந்துகொள்ள முடியாது.

வரலாற்றைப் படைக்க வேண்டுமென்றால் முதலில், வரலாற்றைப் படிக்க வேண்டும் என்பார்கள். எனவே முதலில் கலைஞரின் வரலாற்றைப் படிப்போம். கழகத்தின் வரலாற்றைப் படிப்போம். எதிரிகளின் பொய்களைச் சுக்குநூறாக்க அந்த வரலாறுகளே நமக்கு வழிகாட்டி!

## ஃப்ளாஷ்பேக்





பிச்சைபிள்ளை

### பிரச்சாரப் பொக்கிஷம்!

1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அண்ணன் கே.என்.நேரு அவர்கள் லால்குடி தொகுதியில் முதன்முறையாகப் போட்டியிட்டார். அவரை ஆதரித்து, தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நாடாளு மன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்களும் மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் மேடையில் இடம் பெற்றிருந்தார்கள். இப்படியான கழக முன்னோடிகள் இடம்பெற்ற மேடையில் நகரப் பொறுப்பாளர் என்ற முறையில், நானும் இடம்பெற்றிருந்தேன். இப்படத்தை என் வாழ்நாள் பொக்கிஷம் என்றே கருதுகிறேன்.

**-பிச்சைபிள்ளை, நகர முன்னாள் பொறுப்பாளர், லால்குடி, திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் ராஜாஜி வாழ்த்து

**1969 -ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், கலைஞர் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நேரம். பிப்ரவரி 15 -அன்று தனது 'சுயராஜ்யா' இதழில் கலைஞருக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார் ராஜாஜி. "தன் மீது சார்ந்துள்ள பொறுப்புகளைப் பொறுத்து, அவர் எல்லா வெற்றிகளையும் பெறுவாராக, நேர்மையான – நீதியான- திறமையான நிர்வாகமே அவரது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அதுவும் அவரது கட்சியின் வலிமையை உயர்த்தும்" என வாழ்த்தி இருந்தார்.**

## திராவிட இயக்க இதழ்கள் - மன்றம்




திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான இரா.நெடுஞ்செழியன் எனும் 'நாவலர்' நெடுஞ்செழியன் அவர்களால் தொடங்கப்பட்ட இதழ் 'மன்றம்'. அதற்கு அவர்தான் ஆசிரியர்.

1953- ஆம் ஆண்டு மே 1- ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த இதழ், மாதம் இருமுறை இதழாக வெளிவந்தது. 1960 -ஆம் ஆண்டு வரையில் இந்த இதழ் வெளிவந்ததாகத் தெரிகிறது. இதழ் தொடங்கப்பட்ட சில காலத்துக்குப் பிறகு அது வார இதழாக வெளிவந்தது போலவே சில காலத்துக்குப் பிறகு, இந்த இதழுக்கு நாவலரின் சகோதரர் இரா.செழியன் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

தொடக்கக் காலத்தில் அட்டைப் படம் கருப்பு வெள்ளையில் இருந்திருக்கிறது. பின்னாளில், அது வண்ணப்படமாக மலர்ந்திருக்கிறது. அதேபோல தொடக்கத்தில் இதழின் அட்டையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓவியங்கள் இடம்பிடித்திருக்கும். பின்னர் இதழின் உள்ளே 'அட்டைப் பட விளக்கம்' என்று அந்தப் படத்தின் சிறப்புக் குறித்து நீண்ட கட்டுரை ஒன்று இருக்கும்.

தலையங்கம், கட்டுரை, கதை, நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பல வடிவங்களிலும் படைப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. கழகம் சார்ந்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான படைப்புகளை நாவலரும் செழியனுமே எழுதி இருக்கிறார்கள். மாமேதை இங்கர்சாலின் சிந்தனைகளை நாவலர் மொழி பெயர்க்க, கல்வி, நாடுகளின் வரலாறு போன்றவை குறித்து செழியன் ஆழமான கட்டுரைகளைத் தீட்டியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா குறித்துப் பரவலாகத் தெரியாத விஷயங்கள் துணுக்குகளாக இந்த இதழ்களில் உள்ளன. உதாரணத்துக்கு ஒன்று இது: கிராமம் ஒன்றில் தேர்தல் பிரச்சாரத்தின்போது எதிர்க்கட்சிகளின் தேவை பற்றிப் பேசுகையில், "ஆளும் கட்சி மொந்தைக் கூழ் என்றால், எதிர்க்கட்சி பச்சை மிளகாயைப் போல இருக்க வேண்டும்" என்று பாமர மக்களுக்குப் புரியும் மொழியில் அண்ணா சொல்லியிருக்கிறார்.

இதழின் பெயரிலேயே 'மன்றம் பதிப்பகம்' ஒன்றையும் நாவலர் நடத்தியிருக்கிறார்.

## அறிவியலும் ஆன்மிகமும்!

"நம் அறிவியலாளர்களின் அறிவியல் திறமையைப் போற்றுவதோடு நாம் நின்றுகொள்ள வேண்டும். அவர்களிடம் அறிவியல் மனநிலையை எதிர்பார்க்கக் கூடாது என்பது என் நிலைப்பாடு. இல்லையெனில், சந்திரயான் மாடலோடு திருப்பதி கோயிலுக்கு அவர்கள் செல்வார்களா?

2006 - ஆம் ஆண்டில் குஜராத் போர்பந்தரில் ஸ்ரீஹரி மந்திர் என்கிற கோயில் வளாகம் திறக்கப்பட்டபோது, அப்போதைய இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அக்கோயில் ஆசிரம வளாகத்துள் அமைந்த 'அறிவியல் அருங்காட்சியகத்தை' திறந்து வைத்தார். அதில் வானியல்/சோதிடம், வாஸ்து போன்ற இந்து கண்டுபிடிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தற்கால அறிவியலுக்கு எதிராக, புவியை மையமாகக் கொண்ட ஆரியபட்டரின் வானியலுக்கு என்ன அடிப்படை என்கிற கேள்வியை இயற்பியல் வல்லுநரான அப்துல் கலாம் கேள்வி எழுப்பவில்லை. மாறாக, நவீன வானியலை வளப்படுத்தியதில் பழங்காலத்தவரின் பொருத்தப்பாட்டைப் பற்றி அங்குப் பேசினார். அவர் மட்டுமன்று மற்ற பெரும்பான்மை இந்திய அறிவியலாளர்களும் இதே மனநிலையில்தான் உள்ளனர்.

ஒருமுறை ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சமூக-பண்பாட்டு மதச்சார்பின்மை பற்றிய ஆய்வு நிறுவனத்தினர் (ISSSC) இந்திய அறிவியலாளர்களிடையே நடத்திய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்ற 1,100 அறிவியலாளர்கள் பங்கேற்றனர்.



இவர்களில் 26% தனிப்பட்ட கடவுள் இருப்பிலும், 30% தனிநபர் சாராத ஆன்மீக ஆற்றலிலும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். அவர்களுள் 40% அறிவியலாளர்கள் கடவுள் அற்புத செயல்களைச் செய்பவர் என்று நம்புபவர்களாக இருந்தனர். 29% பேர் கர்மாவில் நம்பிக்கை கொண்டவர்கள். 29% மறுபிறவியில் நம்பிக்கை கொண்டவர்கள்.

இவர்களில் 24% அளவினர் ஆண், பெண் ஆகிய இருவரும் சிறப்பு தெய்வீக ஆற்றலைப் பெற முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். இதுவே, சாமியார்களை நம்புபவர்களுக்கான அடிப்படைக் கூறு. இவர்களுள் புகழ்பெற்ற அறிவியலாளர்களும் அடக்கம் என்றது அந்த ஆய்வு முடிவு.

இறை மறுப்பாளராக இருப்பதற்குத் தளர்வுறாத தன்னம்பிக்கையும் மனத்துணிவும் அவசியம். தன்னம்பிக்கை சற்றுத் தளர்ந்தாலும் இறைசார்பு மனநிலை உருவாகிவிடும். உள நெருக்குதலில் சாதாரண மனிதர்கள் இவ்வாறே அத்தகைய மனநிலைக்கு ஆளாகிவிடுகின்றனர். இங்கு பல அறிவியலாளர்கள் சோதனைச் சாலைக்கு வெளியே சாதாரண மனிதர்களே.


ஆனால், அதை அறிவியல் வெளியில் ஒப்புகொள்ளத் தயக்கம் இருக்கும். எனவே மீயியற்கை (SUPER SCIENCE) அல்லது மீஅறிவியல் (META SCIENCE) என்ற போர்வைக்குள் ஒளிந்துகொள்வர். ஆனால், அறிவியலின் வளர்ச்சி அப்போர்வையை ஆங்காங்கே கிழித்து விடும். அப்போது கிழியாத பக்கத்தைத் தேடி ஒளிய வேண்டியிருக்கும்.

புகழ்பெற்ற உயிரியலாளர் ரிச்சர்ட் டாகின்ஸ் ஒரு முறை சொன்னார்: "கடவுள் முழுமையாக இறந்து போக மாட்டார். ஆனால், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அற்புத ஆற்றல்கள் பலவற்றை இழந்துவிடுவார். அப்படிப்பட்ட கடவுள்- ஐன்ஸ்டீனிய கடவுளாக இருப்பார்"

இந்த எல்லையைக்கூட நம் அறிவியலாளர்கள் பலர் தொடுவதில்லை என்பதே நம் கவலை..."

**-எழுத்தாளர் நக்கீரன் ஃபேஸ்புக் பதிவு**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 224




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.